விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii
பக்கங்கள்: பதினெட்டு
சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 21 திங்கட்கிழமை (06.09.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 261

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

## 18 ஆவது திருத்தச் சட்ட மூலம் 13 ஆவது திருத்தத்தைப் பாதிக்கும்

### கூட்டமைப்புச் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

உத்தேச 18–வது திருத்தச் சட்ட மூலம் 13–வது திருத்தச் சட்ட மூலத்தைப் பாதிக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உத்தேச அரசியல் சாசனத் திருத்தங்களுக்கு ஆதரவளிப்பதா? அல்லது அதனை எதிர்ப்பதா? என்பது குறித்து இன்று தீர்மானிக்கப்படும்.

18–வது திருத்தச் சட்ட மூலம் தொடர்பிலான இறுதித் தீர்மானம் இன்று எடுக்கப்படவுள்ளதாகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரே (18 ஆம் பக்கம் பார்க்க)

## பஸ்ஸின் மிதி பலகையில் பயணித்த குடும்பஸ்தர் தடக்கி விழுந்து உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ்ஸின் மிதிபலகையில் நின்று பயணித்துக் கொண்டிருந்த பயணி ஒருவர் கால் தடக்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

நுணாவில் மேற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த நமசிவாயம் இராசரட்ணம் (வயது–58) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது. நுணாவில் அறவெளி சனசமூக நிலையத்திற்கு முன் குறித்த பஸ்ஸில் பயணித்த மற்றுமொரு பயணி இறங்கிய பின் குறித்த நபர் மீண்டும் பஸ்ஸில் ஏறுகையிலேயே கால் தடக்கி விழுந்து படுகாயமடைந்தார்.

அவர் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி (18 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் சாசனத் திருத்தப் பிரேரணை சமர்ப்பிக்கும் நாளில் வன்முறை அச்சம்

## விசேட பாதுகாப்புக்கு உத்தரவு

(கொழும்பு)

ஆளும் கட்சியின் உத்தேச அரசியல் சாசனத்திருத்தம் தொடர்பான பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் தினத்தில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக வன்முறைகளைத் தடுக்கும் நோக்கில் பொலிஸ் மற்றும் இராணுவத்தின் உதவியுடன் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (18 ஆம் பக்கம் பார்க்க)


இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய இராணுவத் தளபதியை இலங்கை இராணுவத் தளபதி வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

## ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தால் அரசாங்கத்துடன் இணைவோம்

### ★ ஐ.தே.க. மாற்றுக் குழு எச்சரிக்கை ★

(கொழும்பு)

தமக்கெதிராகக் கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் அரசாங்கத்துடன் இணைந்து விடுவோம் என அரசியலமைப்பு திருத்த வாக்கெடுப்பின் போது அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களிக்கத் தீர்மானித்த ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர்கள் எச்சரித்துள்ளனர்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் எல். குணசேகர இது தொடர்பாகக் கூறுகையில், ஐ.தே.க. அங்கத்தவர்கள் சிலர் அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களிக்கத் தீர்மானித்தமையானது தனி நபர்கள் என்ற ரீதியில் தீர்மானம் மேற்கொள்ளப்படுவதற்குக் கட்சியில் உள்ள ஜனநாயகத்தின் ஒரு பகுதியாகும் எனத் தெரிவித்துள்ளார்.

தமக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் அதேபோன்ற நடவடிக்கை கரு ஜெயசூரியவுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

அரசியல் அமைப்புத் திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களிக்கத் தீர்மானித்த 4 சிரேஷ்ட அங்கத்தவர்களைக் (18 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் பேரணியில் ஐ.தே.க. எம்.பி.

(கொழும்பு)

18 வது அரசியல் திருத்தத்திற்கு ஆதரவாக நேற்று கம்பளையில் அரசாங்கத்தினால் நடத்தப்பட்ட பேரணி ஒன்றில் ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் காதர் கலந்துகொண்டுள்ளார்.

அவர் இந்தப் பேரணியில் பிரதான அங்கம் வகித்ததாக கூறப்படுகிது.

சுமார் ஆயிரம் பேர்வரையில் கலந்து கொண்ட அந்தப் பேரணி பிரதமர் தி.மு.ஜெயரத்தின தலைமையில் நடத்தப்பட்டது.

இதேவேளை அப்துல் காதர் மீது தொடுக்கப்பட்டுள்ள சமூர்த்தி தொடர்பிலான வழக்கு ஒன்றின் காரண (18 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டு நிறுவனப் பணியாளர்களுக்கு புலனாய்வுத் துறையின் அனுமதி அவசியம்

### அரசாங்கம் புதிய நடைமுறை

(கொழும்பு)

தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் பணியாற்றிவரும் வெளிநாட்டுப் பணியாளர்கள் தொடர்பான தகவல்கள் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்குள் பிரவேசிக்கும் சகல வெளிநாட்டு தன்னார்வத் தொண்டு நிறுவனப் பணியாளர்களும் புலனாய்வுப் பிரிவினரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை கண்காணிக்கும் நடவடிக்கைகளின் ஓர் கட்டமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புலனாய்வுப் பிரிவினரின் அனுமதி கிடைக்கப் பெற்ற வெளி (18 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல்சாசனத் திருத்தச் சட்டம் மூலம் அதிகாரத்தைப் பெற ஜனாதிபதிக்கு ஆசை

### பேராசிரியர் றொகான் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களைக் குறைத்து ஜனாதிபதியும் சட்டத்தின் முன் சாதாரண மனிதர் போலத்தான் என 2005 இல் மகிந்த சிந்தனையில் கூறிய ஜனாதிபதி 2010 இல் 18 ஆவது திருத்தத்தின் மூலம் தனது அதிகாரங்களைப் பெருக்கிக் கொள்ள ஆசைப்படுகின்றார்.

இவ்வாறு கொழும்புப் பல்கலைக்கழகச் சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் றொகான் எதிரிசிங்க கூறியுள்ளார்.

மனித உரிமைகள் இல்லத்தின் ஏற்பாட்டில் அரசியல் திருத்தங்கள் தொடர்பான சமகாலப் பார்வை என்ற தொனிப்பொருளிலான கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே (18 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உதைபந்தாட்டம்

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் அழைக்கப்பட்ட யாழ். மாவட்ட முன்னணிக் கழகங்களுக் கிடையில் நடைபெற்றுவரும் உதைபந்தாட் ப் போட்டியில் இன்று பிற்பகல் 3,30 மணிக்கு வதிரி டயமன்ஸ் எதிர்த்து இள வாலை யங் ஹென்றிஸ் அணியும் 4.30 மணிக்கு குருநகர் பாடுமீன் விளையாட் டுக்கழகத்தை எதிர்த்து நாவாந்துறை கலை வாணி விளையாட் டுக் கழகம் மோதவுள்ளது.

(ச-3,24)

# 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை அரசாங்கம் மீளப் பெறவேண்டும்

## கொழும்பு ஆயர் வேண்டுகோள்

இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப் படவிருக்கும் அரசியல் யாப்பிற்கு முன் யோசிக் கப்பட்டுள்ள 18 வது அரசியலமைப்பத் திருத் தத்தினால் ஜனநாயக ஆட்சிக்கு ஏற்படுத்தும் தீர்மானகரமான பின்விளைவுகள் குறித்து பொதுமக்கள் அச்சமடைந்துள்ளதாக கொழும்பு பேராயர் டுலீப் டி சிக்கேரா தெரிவித்துள்ளார்.

இதனால் அரசாங்கம் முன்வைக்கவுள்ள 18 வது அரசியலமைப்புத் திருத்தத்தை மீளப் பெறவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தால் இந் நடைமுறை நிறைவேற்றப்பட்டால் இரு தடவைகள் மட்டுமே பதவி வகிக்கலாம் என்ற கட்டுப்பாடு இல்லாது போய்விடும். அதிலும் மேலாக அரசும் ஜனாதி பதியும் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் அர்த்தமுடைய மிக சோதனை நிறைந்த தேர்தல் ஆணைக்குழு, பொது பொலிஸ் ஆணைக்குழு, இலஞ்ச ஆணைக் குழு போன்றவற்றிற்கு தாமே தெரிவுசெய்து நியமிக்கும் அதிகாரத்தைப் பெறுவர்.

கட்சி சார்புடைய அரசியல் நிச்சயமாக பின்னடைவிற்கு வழிவகுக்கும் என்பதில் எது வித ஐயமுமில்லை. இது எமது தேசிய நிறுவனங் களை அரசியல் மயப்படுத்தி இப்போது உடைந்த நிலையிலுள்ள அரசியல் சனநாயக கலா சாரத்தை மிக விரைவாக அழிவின் விளிம்புக் குள் அழைத்துச்செல்லும். எனவே பாராளு மன்றம் இச்சட்டத்தை நிராகரிக்க வேண்டியது இன்றியமையாதது. இந்த நாட்டிலுள்ள ஜன நாயக சுதந்திரத்தை மதிக்கும் யாவரும் இதற்கு தமது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும்.

அத்துடன் பாராளுமன்றமும் மக்களும் 17 வது திருத்தம் முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்ற அழைப்பை விடவேண்டும் (இது ஆளும் எதிர்க்கட்சிப் பராளுமன்ற உறுப்பினர்களால் உடன் இணக்கப்பாட்டுடன் நிறைவேற்றப்பட்டது) இதுமேற்கூறப்பட்ட ஆணைக்குழுக்களின் சுயாதீனம் குறித்து உறுதியளிக்கின்றது. இந்தத் திருத்தத்திற்கு அது நடைமுறைப்படுத்த உரிய தருணம் கொடுக்கப்பட்டபின் எமது பகிர்ந்த தேசிய வாழ்வின் செயல்விளைவு அர்த்தமுற்று சனநாயக வளர்ச்சிக்கு அவசியமாக யாப்பில் திருத்தங்கொண்டு வருவதற்கானவற்றை மதிப்பிட முடியும். அதற்கான காலம் நேரம் அண்மிக்கும்போது மிகவும் கெடுதியான சட் டங்களை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற் கான அவசரம் அவசியம் ஏற்படாது.

இப்போதுள்ள 18 வது திருத்தம் போன்ற வற்றை பொதுமக்கள் முன்விவரித்து அதன் பெறுபெறுகளை அறிந்துகொள்வதற்கு போதிய அவகாசம் வழங்கப்படவேண்டும். அப்போது மக்கள் அரசியல் மாற்றத்தில் ஏற்படும் நன்மை தீமைகளை நன்றாக அறிந்துகொள்வர்.

இந்த நடைமுறையில் பங்குபற்றும் தரு ணத்தைப் பெற்று அறிவூட்டப்பட்ட முடிபு களை எடுப்பர். சனநாயகம் நிலைத்திருக்கும். சட்டமியற்றுபவர்களுக்கு கையளிக்கப்பட் டுள்ள அரசியல் சுதந்திரம் மக்களின் ஜனநா யக உரிமைகள் பேரார்வத்தை நிலைநிறுத்த வேண்டும். இக் கடமை உணர்ச்சியை அசட்டை செய்தால் மக்களின் நம்பிக்கையை மோசடி செய்ததாக கருதப்படும்.

(ச-5)

# 53 யாழ்ப்பாணத் தமிழர்களை அவுஸ். கொண்டு செல்ல முயற்சி

## சென்னையில் சம்பவம்

(சென்னை)

சட்டவிரோதமாக, முறையான ஆவணங்கள் எதுவுமின்றி இலங்கைத் தமிழ் அகதிகள் சில ரை அவுஸ்திரேலியாவிற்கு படகில் அழைத் துச் செல்ல முயன்றதாகக் குற்றஞ்சாட்டப் பட்டு எஸ். சந்திரகாந்தன் என்ற அகதி ஒருவர் திருநெல்வேலி பொலிஸாரால் கைது செய் யப்பட்டிருக்கிறார்.

அவரது ஏற்பாட்டில் பயணம் செய்வதற் காக 53 அகதிகள் திருநெல்வேலி மாவட் டத்திலுள்ள தென்காசியில் காத்திருந்தது தெரிய வந்தது. அவர்களை விசாரித்தபோதுதான் சந்திரகாந்தனின் நடவடிக்கைகள் பற்றி பொலி ஸார் அறிந்துகொண்டதாகவும் அதன்பின் அவர் கைதானதாகவும் செய்திகள் கூறுகின்றன.

அந்த 53 பேரும் அவரவர் அகதி முகா மிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றார் கள். அவர்கள் அனைவரும் யாழ்ப்பாணத் தைச் சேர்ந்தவர்கள் கடந்த இரண்டாண்டுக ளாக தமிழக முகாம்களில் வசித்துவருகிறார் கள்.

38 வயதான சந்திரகாந்தன் வவுனியாவைச் சேர்ந்தவர். கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் தஞ்சம் புகுந்த அவர் ஒரு கட்டம்வரை சென்னையில் டாக்சி ஓட்டுனராக பணியாற்றியிருக்கிறார். பின்னர் முகாம்களில் வசித்தவர்கள் பலர் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குச் செல்ல விரும்புகின்றனர் என்பது தெரியவந்தது புலம்பெயர்ந்த தமிழர் களுடன் தனக்கிருந்த தொடர்பைப் பயன்படுத்தி முறையான ஆவணங்கள் எதுவுமின்றி அகதி களை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கான ஏற் பாடுகளை தான் செய்ய முன்வந்ததாகவும் கன் னியாக்குமரியிலிருந்தோ அல்லது கேரளா சென்று அங்கிருந்தோ இந்த 53 பேரையும் அவுஸ்திரேலியாவுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளைத் தான் செய்ததாகவும் சந்திர காந்தன் பொலிஸாரிடம் கூறியிருக்கிறார் என நம்பப்படுகிறது.

பயணம் செய்யவிருந்த ஒவ்வொருவரிட மிருந்தும் பத்தாயிரம் ரூபாய் வரை அவர் வசூலித்திருக்கிறார். கடந்த மாதம் தான் இவ் வாறு சிலரை அவுஸ்திரேலிய அனுப்ப முயன் றார் என்று வேறொரு இலங்கைத்தமிழர் சிவா என்ற சிவகுமார் சென்னையில் கைதா னார்.

(ச-5)






# கருத்துக் கூறினால் வெள்ளைவான் வரும்!

## அஞ்சுகிறார் சந்திரிகா குமாரதுங்க



18 வது அரசியலமைப்பு சீர் திருத்தம், இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் பயங்கரமான முயற்சி என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாபண்டாரநாயக்ககுமார துங்க தெரிவித்துள்ளார். இது முழுமையாக ஜனநாயக உரிமை மீறல் சம்பவம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

2000 ஆம் ஆண்டு தாம் முன் வைத்த அரசியல் தீர்வுப் பொதியில் நிறை வேற்று ஜனாதிபதி முறையை அகற்றும் யோசனையும் அடங்கியி ருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தாம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்க வேண்டும் என தெரிவித்த போதும் தற்போதைய வெளி நாட்ட மைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இரண்டு வரு டங்கள் வரை அதனை நீடிக்கலாம் எனகூறினார். எனினும் தாம் அதனை நீக்கும் யோசனையை தீர்வுப் பொதி யில் இடம்பெறச் செய்ததாக சந்தி ரிகா குறிப்பட்டுள்ளார்.

புதிய அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதியின் பதவியினை அதிகரிக் கப்பட்டுள்ள நிலையில் மீண்டும் ஜனாதிபதியாகப் போட்டியிடுவீர்களா? என அவரிடம் கேட்ட போது தாம் அதி காரத்திற்கு ஆசைப்பட்டவள் அல்ல என சந்திரிகா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டு வருட ஆட்சி தொடர்பாக சந்தி ரிகாவிடம் கேட்டபோது அது தொடர்பாக தாம் பதிலளிக்க விரும்பவில்லை என் றும் பதிலளித்தால் தமக்கு வெள்ளை வாகனம் அனுப்பப்பட்டு விடும் என குறிப்பிட்டுள்ளார்.

(ச-5)


BRITISH COLLEGE OF HIGHER STUDIES &

EXPRESS INTERNATIONAL STUDIES & CONSULTANTS

BCHS

Eisc

ஆகிய இவ்விரு சகோதர நிறுவனங்களும் இணைந்து எமது நிறுவனத்தின் மூலம் London (UK) / USA / Canada / Newzealand / Australia போன்ற நாடுகளில் உயர் கல்வியினைக் (பட்டப்படிப்பு) கற்பதற்கு சென்ற மாணவர்களை வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

எமது யாழ். கிளையிலே அடிப்படைக் கற்கைநெறிகளை நிறைவுசெய்து இவ்வருடத்திலே இதுவரை (UK) London Visa பெற்று சென்ற பல மாணவர்களிற் சிலர்




AFTER G.C.E A/L OR O/L

காலவிரயமின்றி நீங்கள் ஒரு சர்வதேசத்தரம் கொண்ட பட்டதாரியாகி உங்களின் எதிர்காலத்தை வளமாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்.

ஆகக் கூடியது 3 வருடத்தில் நீங்கள் ஒரு பட்டதாரி

6 Months / 3 Months
Foundation Diploma@BCHS Jaffna
IELTS & English @BCHS Jaffna

$2^{1/2}$ Years
Diploma & Degree @ London(Uk)/USA
Canada/ Australia / Newzealand

(C-1012)

இதுவரை எமது சேவையினூடாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் தமது உயர்கல்வியினை கற்பதற்காக வெளிநாடு சென்றுள்ளார்கள். நீங்களும் பயனடைய இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road) Jaffna.
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)
Tel :021 2224550, 0777585913

No.30 1/14, W A De Silva Mw,
Colombo - 06
Tel : 0112500207, 0777222422, 0714299935



நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு
Green World இன்

மாபெரும் மலிவு விற்பனை

346, கோயில் வீதி, நல்லூர் என்ற முகவரியில்:
அனைத்து வகை செவ்வரத்தை இனமும், தென்னை (2 1/2 வருடம்), பதி மாதுளை, இந்தியன் மாதுளை, கமுகு, தேக்கு, ஒட்டுத்தேசி, இனிப்புத் தோடை, ஜம்புநாவல் (சிவப்பு), பான்பாம், குயின்பாம், கயூமரம் மற்றும் பல பயன்தரு மரங்கள்

மேலதிக விபரங்களுக்கு :
ர.மயூரன்
72/14 பிரம்படிலேன்,
கொக்குவில்.

(2411)

T.P : 0779004320

# இன்று ஒரு தகவல்

## மாலுமியற்ற மரக்கலம்

கப்பலொன்று கடலில் போய்க் கொண்டிருந்தது.

அந்த நேரம் சூறாவளிப்புயல் வீச ஆரம்பித்தது.

கடுமையான காற்றிலும் வேகமான அலைகளிலும் சிக்கி அந்தக் கப்பல் தடுமாறியது.

திசைமாறிப் போய்க் கொண்டிருந்தது.

அந்தக்கப்பலைச் செலுத்திய மாலுமி மிகவும் சாமர்த்தியமாகச் செயற்பட்டார்.

தன்னுடைய அறிவாற்றலையும் திறமையையும் பயன்படுத்தி அந்தக் கப்பலைக் கட்டுப்படுத்தினார்.

மெதுவாக அந்த சூறாவளியிலிருந்து கப்பலைக் காப்பாற்றி கரைக்கு கொண்டு வந்து சேர்த்து விட்டார்.

மாலுமி என்று ஒருத்தர் இருந்ததனால் அந்த மரக்கலம் காப்பாற்றப்பட்டது. மாலுமி என்று ஒருத்தர் இல்லை யென்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தக் கப்பலின் கதி என்னவாகியிருக்கும்? யோசித்துப் பாருங்கள்.

ஒரு கோபக்காரனுடைய நிலைமையும் அப்படித் தானாம்.

''கோபக்காரன் என்பவன் ஒரு மாலுமி இல்லாத மரக்கலம்'' என்கிறார் நபிகள் நாயகம்.

கொந்தளிக்கும் கடலில் கொடுமையான அலைகளின் உச்சியில் அல்லல்படும் மரக்கலத்தை விட மோசமானது கோபக்காரனின் நிலைமை என்பது அவருடைய கருத்து.

அதைமாதிரி இது என்று சொல்லவில்லை. அதைவிட இது மோசம் என்றார். ஏன் தெரியுமா?

ஒருகப்பல் கடலில் தடுமாறினால் அதைச் சரிப்படுத்த மாலுமி இருக்கிறார்.

அவர் தன்னுடைய சாமர்த்தியத்தினால் அதைக் கட்டுப்படுத்தி சரியான வழிக்குக் கொண்டுவந்து விடுவார்.

ஆனால் கோபக்காரனின் நிலைமை அப்படியல்ல!

என்கிறார் நபிகள் நாயகம்.

மனித மனம் ஒரு மரக்கலம் அறிவு அதிலிருக்கும் மாலுமி.

மாலுமி மரக்கலத்தைச் செலுத்துகிறான். அவனுக்குக் கட்டுப்பட்டு அது ஓடுகிறது. ஆனால் கோபக்காரனிடம் அறிவு என்ற மாலுமி சரியாக வேலைசெய்யமாட்டார்.

ஏனெனில் கோபம் அந்த மாலுமியின் கண்களை அழித்துவிடும். காதுகளை கேட்காமல் பண்ணிவிடும்.

கண்ணையும் காதையும் மூடிவிட்டு கப்பலை ஓட்டு என்றால் எப்படி ஓட்டுவது?

அதனால் கோபக்காரன் மாலுமியில்லாத மரக்கலம். இடிமின்னலில் மாட்டிக் கொண்டு கஷ்டப்படுவது போல் கஷ்டப்படுகிறான்.

பெரியவர்களெல்லாம் என்ன சொல்கிறார்கள்? உனக்கு தீமை செய்தவர்களுக்கு நீ நன்மையே செய். எவருடைய விருப்பு வெறுப்பையும் பொருட்படுத்தாதே. பரம எதிரிக்கும் நீ நன்மை செய்ய ஆரம்பித்தால் உன்னுடைய தூய நிலையைப் பார்த்துவிட்டு அவனும் உனக்கு தூய நண்பனாகி விடுவான்.

இது தான் பெரியவர்கள் நமக்குச் சொல்லியிருப்பது.

புனித குர்ஆனில் சொல்வதென்ன?

''தீமையை, நன்மையைக் கொண்டே நீர் தடுத்துக் கொள்ளும்'' (அல்குர்ஆன் 23: 96 இல் ஒருபகுதி) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்துவிடல்'' என்கிறார் திருவள்ளுவர்.

செல்வந்தர் ஒருத்தரிடம் ஒரு சிறுவன் ஆடுமேய்த்துக் கொண்டிருந்தான்.

பெரியவர் அவனைக் கூப்பிட்டு,

''நீ நேராகப் போய் ஒரு ஆட்டிலுள்ள மிகவும் நல்ல பகுதி எதுவோ அதை எடுத்துக் கொண்டுவா'' என்றார்.

இவன் போனான்.

ஒரு ஆட்டின் உடம்பிலிருந்த நாக்கு – இதயம் இரண்டையும் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தான்.

பெரியவர் வாங்கிக் கொண்டார். அதன்பின்,

''இப்பொழுது நீ போய் இன்னொரு ஆட்டில் உள்ள மிகவும் கெட்டபகுதி எதுவோ அதை எடுத்துக் கொண்டு வா''என்றார். இவன் போய் எடுத்துக் கொண்டு வந்தான். அவனுடைய கையில் இருந்தது மறுபடியும் அதே நாக்கும் இதயமும் தான்.

''என்ன இது, இப்பொழுதும் அதையே கொண்டு வந்திருக்கிறாய்'' என்றார் பெரியவர்.

இவன் சொன்னான்:

''ஒரு உடம்பிலுள்ள மிகவும் நல்ல பொருளும் இதுதான். மிகவும் கெட்ட பொருளும் இதுதான்'' என்றான்.

இளம் வயதில் இந்தப் பதிலைக் கூறியவர் தான் பேரறிஞர் லுக்மானுல் ஹக்கீம் அவர்கள்.

கோபப்படாமலிருந்தால் இவையிரண்டும் நன்றாக வேலைசெய்யும். கோபப்பட்டால் இவையிரண்டும் மோசமாக வேலை செய்யும். அதைப் புரிந்து கொள்வதற்காகத் தான் இன்றைக்கு இந்தத் தகவல்.

கோபம் வந்துவிட்டால் நாம் என்ன செய்கிறோம் என்று நமக்கே தெரியாது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# 620 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகளுக்கு மேல்மாகாண பாடசாலைகளில் ஆசிரிய நியமனம்

(கொழும்பு)

620 இற்கு மேற்பட்ட பட்டதாரிகளுக்கு இவ்வருடம் மேல் மாகாண பாடசாலைகளில் ஆசிரியர் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 325 பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்களை வழங்கி வைக்கும் வைபவம் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்கு முன்னர் மேலும் 300 இற்கு மேற்பட்ட பட்டதாரிகள் மேல்மாகாணப் பாடசாலைகளில் ஆசிரிய சேவைக்காக இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என மாகாணக் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஜே.சேதரஹெற்றி தெரிவித்துள்ளார்.

2008 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டிப் பரீட்சைகளின் புள்ளிகளின் அடிப்படையில் இந்தப் பட்டதாரிகள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

மேல்மாகாணப் பாடசாலைகளில் மாதாந்தம் 40க்கும் 45க்கும் இடைப்பட்ட ஆசிரியர்கள் ஓய்வு பெறுகின்றனர். இதன்படி வருடம் ஒன்றிற்கு சுமார் 500 ஆசிரியர்களுக்கான வெற்றிடம் ஏற்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை நுண்கலைப் பட்டதாரிகளை ஆசிரிய சேவைக்கு இணைத்துக் கொள்ளும் போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் 9 ஆம் திகதி நடைபெறும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர ஏதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

சிங்கள மொழி மூலப் பட்டதாரிகள் 5100 பேரும் தமிழ் மொழி மூலப் பட்டதாரிகள் 1300 பேரும் இந்தப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கின்றனர் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் கூறினார்.

(ஸ்ரீ-7)

# இராசி பலன்

*06.09.2010*
*(ஆவணி 21, திங்கட்கிழமை)*
*திரியோதசி முன்னிரவு 9.25 மணி வரை*
*பூசம் காலை 6.33 மணி வரை*
*ஆயிலியம் பின்னிரவு 5.00 மணி வரை*
*இராகுகாலம் 7.34 - 9.04 மணி வரை*
*சுபநேரம் - 12.04 - 1.34 மணி வரை*
*நல்லூர் கந்தன் சப்பரம்*
*பிரதோச விரதம்*

**மேடம்** இனிய செய்தி இல்லம் தேடிவரும் நாள், தொழில் சம்பந்தமாக பரபரப்பாகச் செயற்படுவீர்கள், பயணங்கள் மனம் மகிழ்ச்சி தரும் விதத்தில் அமையும், உறவினர்கள் வழியில் [illegible]

**இடபம்** சாமர்த்தியமான பேச்சுக்களால் சாதனை படைக்கும் நாள், இழுபறியாக இருந்த வழக்கில் வெற்றி கிடைக்கும், மூத்தவர்களால் ஏற்பட்ட பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள்.

**மிதுனம்** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு உறுதுணையாக விளங்குவர், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும், பிரியமான சிலரின் சந்திப்புக்கிட்டும்.

**கடகம்** முன் கோபத்தைக் குறைப்பதன் மூலம் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், புண்ணிய காரியம் செய்யும் எண்ணம் உருவாகும், சந்திர வழிபாட்டால் சந்தோசம் காண வேண்டிய நாள்.

**சிங்கம்** விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபடவேண்டிய நாள், பிரியமான சிலரின் தேவைகளை நிறைவு செய்ய வேண்டி வரலாம், இடமாற்றம் பற்றிய சிந்தனை உருவாகும், உஷ்ண சம்பந்தமான சில ரோகங்கள் ஏற்படலாம்.

**கன்னி** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பாராட்டும் புகழும் கூடும், குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழும் வாய்ப்புண்டு, தொலைபேசி மூலம் நல்ல செய்திகள் வந்து சேரும்.

**துலாம்** தொழில்தொடர்பாக புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள், வெளிவட்டாரத் தொடர்பால் மதிப்பும், மரியாதையும் உயரும், இல்லத்தில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்.

**விருச்சிகம்** குழப்பங்கள் அகன்று குதூகலம் காண வேண்டிய நாள், உறவினர் உதவி செய்ய முன்வருவார், மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கிட்டும், பெரியோரின் தொடர்புண்டு.

**தனுசு** ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், வீண் அலைச்சல்கள் ஏற்படலாம், வாகனத்தில் செல்லும் போது கவனம் தேவை, வேலையாட்களிடம் விட்டுக் கொடுத்து நடப்பது நல்லது.

**மகரம்** நீண்ட நாளைய ஆசை நிறைவேறும் நாள், நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கிச் செல்வீர்கள், கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் ஏற்படும், நண்பர்களின் சந்திப்பால் பரவசம் ஏற்படும்.

**கும்பம்** எதிரிகள் உதிரியாகும் நாள், எதிர் காலத்தைப் பற்றிய முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள், மனக் குழப்பங்கள் அகலும், நீண்ட நாட்களாக தொல்லை தந்த கடனை கொடுக்கும் எண்ணம் உருவாகும்.

**மீனம்** குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், சொந்த பந்தங்களுக்கிடையில் மதிப்பும் மரியாதையும் உயரும், பிள்ளைகள் உற்சாகத்துடன் காணப்படுவர், கூட்டுத் தொழில் முன்னேற்றமடையும்.

வளவன்

# அதிபர்களுக்கான கலந்துரையாடல்

க.பொ.த (சாதாரணதர) மாணவர்களுக்காகக் கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பயிற்சி தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு இன்று திங்கட்கிழமை மாலை 2.00 மணிக்கு $1^{AB}$, $1^{C}$, தரம் II பாடசாலை அதிபர்கள் வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்திற்கு சமூகம் தருமாறு வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.


(ஸ்ரீ-2)

## பேசும் படம்




# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 70 |
| தக்காளி | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 |
| கோவா | 80 | 70 |
| கரட் | 70 | 90 |
| பூசணி | 40 | 30 |
| புடோல் | 40 | 40 |
| வாழைக்காய் | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 40 |
| கரணைக்கிழங்கு | 80 | 70 |
| பயிற்றங்காய் | 60 | 100 |
| லீக்ஸ் | 120 | 90 |
| பீற்றூட் | 30 | 40 |
| கறிமிளகாய் | 60 | 80 |
| முருங்கைக்காய் | 100 | 100 |
| போஞ்சி | 120 | - |
| கத்தரி தம்புள்ள | 60 | 50 |
| கீரை - 1 பிடி | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 |


ஊர்காவற்றுறைப் பிரதேசத்திலுள்ள 8 கிராமங்களின் கிராமமட்ட அமைப்புக்களுக்கான நிர்வாக முகாமைத்துவப் பயிற்சி கடந்த வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ச.சிறீமோகனன் ஆரம்ப உரை நிகழ்த்துவதனையும் Sond நிறுவன திட்ட இணைப்பாளர் க.செந்தூரன் அமைப்புக்களுக்கான பயிற்சியை வழங்குவதையும் பயிற்சியில் பங்குபற்றியோரையும் படங்களில் காணலாம்.

## விசேட இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞான சம்பந்தர் ஆதினத்தால் நல்லூர் முருகன் உற்சவத்தை முன்னிட்டு, நடாத்தப்படும் விசேட இசை நிகழ்ச்சி இன்று காலை 8 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இன்று காலை 8 மணிக்கு மங்கல விளக்கேற்றல் மற்றும் இறைவணக்கத்துடன் நிகழ்வு ஆரம்பமாகி, காலை 8.15 மணிக்கு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கவுள்ளார்.

அத்துடன் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை பஜனைக் குழுவினரின் "முருக நாம பஜனை" இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-2)

## நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்ட நிகழ்வுகள்

(நல்லூர்)

நல்லூரான் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடைபெற்று வரும் தெய்வீக இசையரங்கில் 23 ஆம் நாளான இன்று திங்கட்கிழமை மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை பொன். ஸ்ரீவாமதேவன்(பாட்டு),கே.குகபரன் (வயலின்), பிரம்மஸ்ரீ எஸ்.வரதராஜசர்மா (மிருதங்கம்), சதாவேல்மாறன் (கடம்), எஸ்.செந்தூரன் (முகர்சிங்) ஆகியோர் வழங்கும் திருமுறைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

✠✠✠

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் மஹோற்சவ காலத்தில் நாவலர் மணிமண்டபத்தில் ஆத்மீக சிந்தனையுடன் நடைபெற்று வரும் சமயச்சொற்பொழிவு மற்றும் கலை நிகழ்வுகளில் இன்று பிற்பகல் 3 மணி முதல் 6 மணிவரை "ஆறுபடையான்" எனும் விடயம் பற்றி ஆசிரியர் இரா.செல்வவடிவேல் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து அரியாலை சித்தி விநாயகர், சங்கானை மாவடி ஞானவைரவர் மற்றும் வட்டுக்கோட்டை வட்டுசிவன் ஆகிய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

✠✠✠

நல்லூர்க் கந்தன் ஆலய பெருந் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் நடைபெற்றுவரும் "வில்லிபாரதம்" பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு 'கிருஷ்ணன் தூது'' என்னும் விடயம் பற்றி பிரம்மஸ்ரீ சிவ.வை நித்தியானந்த சர்மா தொடர் இசைப் பேருரை நிகழ்த்தவுள்ளார். (ஸ்ரீ-7)

## நல்லூர் தேர்த்திருவிழாவன்று வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் தீர்மானத்திற்கு அமைய, நாளை செவ்வாய்க் கிழமை நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர்த் திருவிழாவை முன்னிட்டு, சகல வர்த்தக நிலையங்களிலும் கடமையாற்றும் வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டுமென யாழ்.வணிகர் கழகத் தலைவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## இசை, நடன நாடக நிகழ்ச்சி

(கொழும்புத்துறை)

யா/பரியோவான் கல்லூரி பழைய மாணவர் சங்கம் தென்னிலங்கை கொழும்பு கிறிஸ்தவ தமிழ் கலாமன்றமும் இணைந்து வழங்கும்" நெஞ்சம் மறப்பதில்லை" எனும் கிறிஸ்தவ தமிழ் இசை, நடன, நாடக நிகழ்ச்சி யா/ பரியோவான் மண்டபத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி பிற்பகல் 4மணிக்கு நடைபெறவுள்ளது.

கிறிஸ்தவ தமிழ் கலாமன்ற தலைவர் ஏச்.ரி.விபுலானந்தாமூர்த்தியின் நெறியாள்கையில் நடைபெறும் மேற்படி இசை, நடன, நாடக நிகழ்ச்சி வசதி குறைந்த திறமை மிக்க மாணவர்களை கல்லூரியில் சேர்த்து கல்வி கற்க உதவும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட புலமைப்பரிசில் நிதிக்காக மேடையேற்றப்படவுள்ளதாக பரியோவான் கல்லூரி அதிபர் வண. என்.கே. ஞானப் பொன்ராஜா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-7-51)

## 20-20 கிரிக்கெட் போட்டியின் இறுதிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் வாழும் மக்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்பும் முகமாக, யாழ்.பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவின் பணிப்புரையின் பேரில், பாதுகாப்புப் படைகளின் தலைமையகத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்கள், முப்படையினர் மற்றும் பொலிஸ் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் பங்குபற்றலுடன் இருபது 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்று நடைபெற்று வருகின்றது.

இச் சுற்றுப்போட்டியின் மாபெரும் இறுதிப் போட்டி எதிர்வரும் 10 ஆம்திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடாத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்புப் படையினரின் தலைமையகத்தினர் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

## மருதங்கேணி வைத்தியசாலையை இயக்க நடவடிக்கை எடுக்கவும்

### மருதங்கேணி வைத்தியசாலை அபிவிருத்தி சபை கோரிக்கை

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் எதிர்வரும் 9, 10ஆம் திகதிகளில் மக்களை மீள்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் அப்பகுதியில் உள்ள மருதங்கேணி வைத்தியசாலையை உடனடியாக அப்பகுதியில் இயக்க நடவடிக்கை எடுக்குமாறு மருதங்கேணி வைத்தியசாலை அபிவிருத்தி சபை கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும் மக்களை உடனடியாக மீளக் குடியமர்த்துகின்ற சூழ்நிலையில், அப்பகுதியில் உடனடியாக ஏற்படக்கூடிய தொற்று நோய்களுக்கு முகம் கொடுக்கும் அபாயம் ஏற்படும் என்பதால் அப்பகுதியில் வைத்தியசாலையை இயக்க நடவடிக்கை எடுக்குமாறு இது தொடர்பில் மாகாண சுகாதார பணிமனைக்கு வைத்தியசாலை அபிவிருத்தி சபை கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-43)




## மீள்குடியேறிய மக்களுக்கு வாழ்வாதார உதவிகள்

வேள்ட்விசன் லங்கா நிறுவனமும் சங்கானை பிரதேச செயலகமும் இணைந்து மீளக்குடியேறிய மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக தெரிவு செய்யப்பட்ட 87 பயனாளிகளுக்கு 30 இலட்சம் ரூபா பெறுமதிமிக்க உபகரணத் தொகுதியை வழங்கியுள்ளது.

இந்நிகழ்வு நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திகுமார் தலைமையில் சங்கானைப் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

சங்கானைப் பிரதேசத்திற்குட்பட்ட 7 கிராமசேவையாளர் பிரிவுகளில் விவசாயிகள் , சிறு வியாபாரிகள்,சிறு தொழில் முயற்சியாளர்கள், கணவனை இழந்த பெண்கள், தச்சு, மேசன்தொழில் புரிபவர் என பலர் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றிய பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், வறுமையிலுள்ள மக்கள் தமது மேம்பாட்டிற்கு இதுபோன்ற மானிய தேவைகள் வரும்காலங்களில் தொடர்ந்து கிடைக்கும் என எதிர்பார்த்து காலத்தை வீணடிக்காது வங்கிகளின் ஊடாக வடக்கின் வசந்தத்தின் கீழ்பெறக்கூடிய இலகு கடன் வசதிகளைப் பெற்று கடினமாக உழைத்து தம்மை வளப்படுத்திக்கொள்ள முன்வர வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இதற்கான உதவிகளை உரிய வகையில் பெற பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சும் அதன் கீழ்இயங்கும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையும் தயாராக வுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வலிகாமப் பிரதேச இணைப்பாளர் ஜீவன் மற்றும் வேள்ட்விசன் லங்கா நிறுவன அதிகாரிகளும் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

இதேவேளை வேள்ட்விசன் லங்கா நிறுவனம் 27 இலட்சம் பெறுமதியில் அராலி வடக்கு பகுதியில் நீர்த்தாங்கி ஒன்றினையும் அமைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## சின்னக்கடையில் தேடுதல் நடவடிக்கை காலாவதியான பொருட்கள் மீட்பு

### பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் அதிரடி

(யாழ்ப்பாணம்)

சின்னக்கடை மற்றும் அதை அண்டிய குருநகர் சுற்றயல் பகுதிகளில் யாழ்.மாநகர சபையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நடத்திய திடீர் அதிரடி சோதனை நடவடிக்கைகளில் பெருந்தொகையான காலாவதியான உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

ப்லசரக்குக் கடையொன்றிற்கு சொந்தமான களஞ்சிய அறையில் காலாவதியான பெருமளவு பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது. இவர்கள் மீதான சட்ட நடவடிக்கையின் பின்னர் அவை அழிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. மனித சுகாதாரத்திற்கு பாதகமான நிலையில் உணவு தயாரிப்பில் ஈடுபட்டிருந்த பல உணவு விற்பனை நிலையங்களின் உரிமையாளர்களும் இதன்போது கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் முதல் மேற்கொள்ளப்பட்ட இவ் அதிரடி நடவடிக்கையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான பா.கிஷோக்குமார், அ.பகீரதன், யோ.பேடினன்ஸ் மற்றும் பொதுச்சுகாதார பாதுகாவலர் சுபேந்திரன் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர். (ச)

# அரசாங்கம் முன்வைக்கவுள்ள 18ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை மீளப்பெற வேண்டும்

# கொழும்பு பேராயர் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தினால் மேற் கொள்ளப்படவிருக்கும் அரசியல் யாப்பிற்கு முன்யோசிக்கப்பட்டுள்ள 18 ஆவது அரசிய லமைப்புத் திருத்தத்தினால் சனநாயக ஆட் சிக்கு ஏற்படுத்தும் தீர்மானகரமான பின் விளைவுகள் குறித்து பொதுமக்கள் அச் சமடைந்துள்ளதாக கொழும்பு பேராயர் டுலீப் டி சிக்காரோ தெரிவித்துள்ளார்.

இதனால் அரசாங்கம் முன்வைக்கவுள்ள 18 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை மீளப்பெறவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார் .

பாராளுமன்றத்தால் இந் நடைமுறை நிறைவேற்றப்பட்டால் இரு தடவைகள் மட் டுமே பதவிவகிக்கலாம் என்ற கட்டுப்பாடு இல் லாது போய்விடும் .அதிலும் மேலாக அரசும் ஜனாதிபதியும் மக்களின் ஜனநாயக உரிமை களைப் பாதுகாக்கும் அர்த்தமுடைய மிக சோதனை நிறைந்த தேர்தல் ஆணைக்குழு, பொதுக்காவல்துறை ஆணைக்குழு, இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழு போன்றவற் றிற்கு தாமே தெரிவு செய்து நியமிக்கும் அதி காரத்தைப் பெறுவர்.

கட்சி சார்புடைய அரசியல் நிச்சயமாக பின் னடைவிற்கு வழி வகுக்கும் என்பதில் எவ்வித ஐயமில்லை.இது எமது தேசிய நிறுவனங் களை அரசியல் மயப்படுத்தி இப்போது உடைந்த நிலையிலுள்ள அரசியல் ஜனநா யக கலாசாரத்தை மிக விரைவாக அழிவின் விளிம்பிற்குள் அழைத்துச் செல்லும். எனவே பாராளுமன்றம் இந்தச் சட்டத்தை நிராகரிக்க வேண்டியது இன்றியமையாதது. இந்த நாட் டிலுள்ள ஜனநாயக சுதந்திரத்தை மதிக்கும் யாவரும் இதற்குத் தமது எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும்.

அத்துடன் பாராளுமன்றமும் மக்களும் 17 ஆவது திருத்தம் முழுமையாக அமுல் படுத்தப்படவேண்டும் என அழைப்பை விட வேண்டும். (இது ஆளும் எதிர்க்கட்சி பாராளு மன்ற உறுப்பினர்களால் உடன் இணக்கப் பாட்டுடன் நிறைவேற்றப்பட்டது) இது மேற் கூறப்பட்ட ஆணைக் குழுக்களின் சுயாதீனம் குறித்து உறுதியளிக்கின்றது.

இந்தத் திருத்தத்திற்கு அது நடைமுறைப் படுத்த உரிய தருணம் கொடுக்கப்பட்ட பின் எமது பகிர்ந்த தேசிய வாழ்வின் செயல் விளைவு அர்த்தமுற்று ஜனநாயக வளர்ச் சிக்கு அவசியமாக யாப்பில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கானவற்றை மதிப்பிட முடியும் .அதற்கான காலம் நேரம் அண்மிக் கும் போது மிகவும் கெடுதியான சட்டங்களை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுதற்கான அவசரம், அவசியம் ஏற்படாது.

இப்போதுள்ள 18ஆவது திருத்தம் போன் றவற்றை பொது மக்கள் முன் விபரித்து அதன் பெறுபேறுகளை அறிந்து கொள்வ தற்கு போதிய அவகாசம் வழங்கப்பட வேண் டும். அப்போது மக்கள் அரசியல் மாற்றத்தில் ஏற்படும் நன்மை, தீமைகளை நன்றாக அறிந்து கொள்வர்.

இந்த முறையில் பங்குபற்றும் தரு ணத்தைப் பெற்று அறிவூட்டப்பட்ட முடிபு களை எடுப்பார். ஜனநாயகம் நிலைத்தி ருக்கும் சட்டமியற்றுபவர்கள் கையளிக்கப் பட்டுள்ள அரசியல் சுதந்திரம் மக்களின் ஜனநாயக உரி மைகள் பேரார்வத்தை நிலை நிறுத்த வேண்டும். இக் கடமை உணர்ச்சியை அசட்டை செய்தால் மக்களின் நம்பிக் கையை மோசடி செய்ததாகக் கருதப்படும்.

(ஸ்ரீ-2)

## துணுக்காய் வலயக்கல்வி அலுவலகம் இடமாற்றம்

(பருத்தித்துறை)

தற்போது மல்லாவி மத்திய கல்லூரியில் இயங்கி வரும் துணுக்காய் வலயக்கல்வி அலு வலகமானது அடுத்த மாதம் முதல் மாங் குளத் தில் உள்ள பழைய அலுவலகத்தில் இயங்க வுள்ளதாக துணுக்காய் வலயக் கல்வி வட்டா ரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலும் இவ்வலயத்திற்குட்பட்ட 54 பாட சாலைகளில் கரிப்பட்ட முறிப்புப் பாடசாலை யைத் தவிர மற்றைய 53 பாடசாலைகளும் தற்போது இயங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (ஸ்ரீ-2-7-10)

## சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் தென்னாசியாவின் பருமனான மரம்

அரேபியர் காலத்துக்கு உரித்தா னதாக மன்னார் மாவட்டத்தின் பள்ளி முனை கிராமத்தின் பிரதான வீதி யின் அருகில் அமைந்துள்ள பெருக்க மரம் தென்னிலங்கையில் இருந்தும் வெளிநாடுகளில் இருந் தும் மன்னாருக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது.

Biobab என்பது இதன் பெயர். இப் பெருக்க மரம் தென்னாசியாவி லேயே மிகப் பெரிய சுற்றளவை உடையது .மிகவும் பிரமாண்டமான தாக மட்டுமன்றி அழகான தோற்றத் திலும் காணப்படுகிறது.

இதனால் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இதை வந்து பார்த்து விட்டு செல்கின்றனர்.

இம் மரத்தின் அகலச் சுற்றளவு 19.5 மீற் றர் ஆகவும் நீளம் 7.5 மீற்றர் ஆகவும் காணப் படுகிறது.



இம் மரத்தை மன்னார் பள்ளிமுனை புனித லூசியா ஆலய நிர்வாகத்தினர் பரா மரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ)

## அரசுக்கு ஆதரவாக வாக்களிப்போர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

## ஐ.தே.க. அறிவிப்பு

(கொழும்பு)

புதிய அரசியல் சட்டத்தின் மீதான விவாதத்தில் அரசுக்கு ஆதரவாக வாக் களிக்கும் தமது உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள் ளப்படும் என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதன் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசு கொண்டுவந்துள்ள புதிய 18 ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதர வாக வாக்களிக்கும் ஐ.தே.க. உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். எமது கொள்கைக்கு ஆதரவாக கரம் உயர்த்தியவர்கள் அதனை பின்பற்ற வேண்டும்.

ஆனால் எமது கொள்கைகளுக்கு மாறாக நாடாளுமன்றத்தில் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தால் அவர்கள் கட்சியில் இருந்து நீக்கப்படுவார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## சன் சீ கப்பலில் சென்ற தமிழர்கள் அனைவருக்கும் கனடாவில் புகலிடம் வழங்கக்கூடிய சாத்தியம்

(கொழும்பு)

உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது ஈழத்தமிழ் மக்களை ஏற்றுக்கொள்ளும் விகிதம் கனடாவில் அதிகம் என்பதால் சன் சீ கப்பலில் வந்த 492 தமிழர்களில் பெரும்பாலானவர்களுக்கு அகதித்தஞ்சம் வழங் கப்படும் என கனடாவில் இருந்து வெளிவரும் தரொறன்டோ சன் என்ற ஊடகம் தகவல் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வதில் கனடா ஆர்வம் காட்டி வரு கின்றது. இந்து வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் தமிழ் மக்களின் விண் ணப்பங்களில் 85 விகிதமானவை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

2009 ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண் ணிக்கை 90. 7 விகிதமாகும். 2008 ஆம் ஆண்டு இது 93 விகிதமாக இருந் தது. சுவிற்ஸர்லாந்தில் உள்ள கனடாவுக்கான அகதிகள் மற்றும் குடிவரவுத் துறை ஆய்வு மையம் இதனை தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவை விட கனடா 14 விகிதம் அதிகமாக தமிழ் மக்களை ஏற்றுக் கொண்டு வருகின்றது. கடந்த 2009 ஆம் ஆண்டு தமிழ் மக்களின் விண்ணப்பங்களை அவுஸ்திரேலியா 76.9 விகிதமாகவும் கனடா 90.7 விகித மாகவும் ஏற்றுக்கொண்டிருந்தன என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஸ்ரீ-2)


யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்
BCHS
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

To Study in UK(London), Canada, Australia,Newzealand Hot.... Hot courses for easy Student visa are open now

100% நல்ல சம்பளம்

FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT
FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)
FOUNDATION DIPLOMA IN MANAGEMENT

எங்கு சென்றாலும் நல்ல வேலை வாய்ப்பு

➤ இக் கற்கை நெறிகளின் Diploma & Degree பட்டப்படிப்பை 100% விசா உத்தரவாதத்துடன் நீங்கள் மேற்குறிப்பிட்ட நாடுகளில் கற்கலாம்.
➤ உங்களுக்கான விசா உத்தரவாதத்தினை இத்துறையில் பல வருட அனுபவமுள்ள எமது சட்டத்தரணிகள் உறுதிசெய்வார்கள்.

கல்வித்தகமை : G.C.E. (O/L) போதுமானது
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் எம்மை தொடர்பு கொள்ளவும்

IELTS (International English Language Testing System)
(Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months
(We guarantee minimum band 6.0 Upwards)

புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.
பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் 100 % உறுதி.

SPOKEN ENGLISH
இன்றைய நவீன உலகத்தில் ஆங்கில அறிவின் தேவைக்கேற்றபடி இப்பாடத்திட்டமானது நடாத்தப்படுகின்றது.
வகுப்புகள் சனி, ஞாயிறு, வாரநாட்களிலும், தொழில் புரிபவர்களுக்காக மாலை நேரங்களிலும் உண்டு

Diploma in English | Advance Diploma Iin English
100 % பயிற்சி
மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது
100 % வெற்றி

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0714299935

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
திகதி 10.09.2010 / 12.09.2010 / 15.09.2010
காலை : 10.00 மணி
மாலை : 04.00 மணி

# உங்கள் படிப்பின் மீது குழப்பமா



பாடசாலைக் கல்வியை முடித்து கல்லூரி வாழ்க்கைக்கு பலர் அடியெடுத்து வைத்திருப்பீர்கள். நீங்கள் பெற்ற பெறுபேற்றின் அடிப்படையில் உங்களுக்குப் பிடித்த படிப்பையோ அல்லது பிறர் சொன்ன துறையை கேட்டோ கல்லூரியில் சேர்ந்து படித்துக் கொண்டிருப்பீர்கள். அவர் களில், பலருக்கு புதிய கல்லூரி, நண்பர் கள், சூழல் என அனைத்தும் பிடித்திருக்கும். ஆனால் சிலருக்கு ஏன் இந்தப் படிப்பில் சேர்ந்தோம்? என்று தோன்றும். அது போன்ற மனநிலையைப் பெற்றவர்கள் அதற்கான காரணத்தை அறியுங்கள்.

**இதோ சில காரணங்கள்:**

- உங்களுடன் பாடசாலையில் படித்த பழைய நண்பர்கள் இல்லாமல் இருக்கலாம். அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கலாம்.
- தேர்ந்தெடுத்துள்ள துறை கடினமானதாகவோ, உங்களால் படிக்க முடியாததாகவோ இருக்கலாம்.
- இதைப் படித்தால் எதிர்காலம் என்னவாகும்? என்ற ஏக்கம் ஏற்படலாம்.

இதில் முதல் காரணத்தால் உங்களுக்குப் படிப்பு பிடிக்கவில்லை என்றால் கவலை கொள்ளாதீர்கள். பொறுமையாக இருங்கள். நாட்கள் செல்ல செல்ல , நண்பர்கள் ஆசிரியர்களுடன் சுமுகமாக பழகும் சூழல் ஏற்படுத்துங்கள். மேலும் பாடத்தின் மீது உங்கள் ஈர்ப்பை அதிகப்ப டுத்தினால் அது தேவையற்ற சிந்தனை களை அகற்றும்.

இரண்டாவது மற்றும் மூன்றாவது காரணங்களால் உங்களுக்கு இந்தப்படிப்பு பிடிக்கவில்லையென்றால் சற்று சிந்தியுங்கள். எந்தப் பாடம் உங்களுக்கு கடினமானதாக உள்ளதோ அதை அன்றாடம் படியுங்கள். அந்தப் பாடத்தை நடத்தும் ஆசிரியரிடம் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளுங்கள். இதை முடித்தால் வேலை கிடைக்குமா? என்ற எண்ணத்தை மாற்றுங்கள். ஏனெனில் நம்மில் பலர் படித்த துறை தொடர்பான வேலைக்கு செல்வதில்லை.

உங்கள் பெற்றோர், நண்பர்கள், கல்லூரியில் படிக்கும்சீனியர் மாணவர்களிடம் கலந்து ஆலோசியுங்கள். இதன்மூலம் நீங்கள் தெளிவான முடிவுகளை மேற்கொள்ளலாம். எந்த ஒரு முடிவானாலும் அவசரப்படாமல் நிதானமாக எடுத்து படிப்பிலும், வாழ்விலும் வெற்றிகாணுங்கள்.

# மரபியல்

ஜெனிடிக்ஸ் என்ற வார்த்தை கிரேக்க மொழியிலிருந்து தோன்றியதாகும். மரபியலானது உயிரியலின் ஒரு பிரிவாகும். மரபியல் என்பது உயிர் வாழ் உயிரினங்களின் மரபணுக்குள் இடையிலான வேறுபாடுகள் பற்றிப் படிக்கும் அறிவியல் துறையாகும்.

மரபணு (ஜீன்) என்பது மரபுப் பண்புகளின் அடிப்படை அலகாகும். மனித உடலில் உள்ள ஒவ்வொரு செல்லிலும் 30 ஆயிரத்திலிருந்து 40 ஆயிரம் வரையிலான மரபணுக்கள் உள்ளன. இந்த மரபணுக்கள் தான் மரபுரீதியான குணங்களை சந்ததிகளுக்கு எடுத்துச் செல்கின்றன. தோலின் நிறம், கண்களின் நிறம்,தோற்றம், எண்ண ஓட்டம் போன்ற பரம்பரைக் குணங்கள் பெற்றோர்கள் மூலமாக சந்ததிக்கு கடத்தப்படுகின்றன. ஆரம்பகாலத்தில் மரபுப் பண்புகள் தொடர்பாக முன்னோர்கள் பெற்றிருந்த அறிவை விவசாயத்திற்கும், கால்நடைகள் வளர்ப்பிற்கும் பயன்படுத்தி வந்தனர்.

இந்நிலையில், பத்தொன்பதாம் நூற்றாண்டில் நடுப்பகுதியில் கிரகர் மெண்டல் என்பவர் மரபியலின் அடிப்படை அம்சங்கள், உயிரினங்களின் இயல்புகள் உள்ளிட்டவற்றின் அலகுகளைக் கண்டறிந்தார். அவற்றிற்கு ஜீன்கள் எனப் பெயரிட்டார்.

இத்துறையின் வளர்ச்சி தற்போது அதிகளவு உள்ளது. இத்துறை சார்ந்த படிப்புக்களில் குரோமோசோம்களின் அமைப்பு, தாவரங்கள் மற்றும் விலங்குகளின் தோற்றம் உள்ளிட்டவற்றை ஆராலாம். மேலும் ஆய்வு நிறுவனங்கள், எய்ட்ஸ், புற்றுநோய் உள்ளிட்ட கொடிய நோய்களுக்கு மரபியல் உதவியுடன் மருந்து கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளன. விலங்குகளில் செல்வர்க்கம் (குளோனிங்) தொடர்பான ஆய்வுகள் இத்துறையில் நடைபெறுகின்றன.

(தொடரும்)

# அறிவுக் கலசம்

வலம்புரி

ஆர்.யூ.பாலமுருகன்

# தகவல் தொழில்நுட்பக் கல்விக்கான இலவச புலமைப்பரிசில் பரீட்சை

## Mega 2010

தகவல் தொழில்நுட்பக் கல்விக்கான இலவச புலமைப்பரிசில் திட்டமென அறிவித்து ஏசியன் கொம்பியூட்டர் நிறுவனத்தின் யாழ்.கிளை விடுத்துள்ள செய்திக் குறிப்பிலிருந்து 1993 ஆம் ஆண்டு தொடக்கம் தகவல் தொழில்நுட்பக் கல்விச் சேவையில் கொழும்பிலும் ஏனைய மாவட்டங்களிலும் முன்னணி வகித்துவரும் ASIAN COMPUTERS நாடு முழுவதிலுமுள்ள கிளைகளின் ஊடாக சமகால நவீன கணனி பயிற்சிகள் அனைத்தையும் 16 ஆண்டு காலமாக மாணவர்களுக்கு வழங்கி வருகிறது.

2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இந்தியாவை தலைமையகமாகவும் தென் மாவட்டங்களில் 500 பயிற்சிமையங்களைக் கொண்டு இயங்கும் மிகப் பெரிய நிறுவனமான CSC கொம்பியூட்டர் எடியூகேஷன் உயர் கல்வி நிறுவனத்துடன் இணைத்து சர்வதேச தரம் மிக்க மற்றும் அங்கீகாரம் பெற்ற டிப்ளோமா சான்றிதழ்களையும் ASIAN வழங்கி வருகிறது.

அத்துடன் சிஎஸ்சி, Softview மல்டிமீடியா பயிற்சி நிலையத்துடன் இணைந்து அனிமேஷன் பாடத்திட்டத்தையும் இலங்கை மாணவர்களுக்கு அளிக்கிறது.

இவ்வகையில் ஒவ்வொரு ஆண்டும் இலங்கையைச் சேர்ந்த அனைத்து மாணவர்களும் பயன்பெறும் வகையில் குறிப்பாக சாதாரணதர மற்றும் உயர்தர பரீட்சைகளின் பின் Mega SAT Scholarship Aptitude Test எனும் கணனிப் படிப்புகளுக்கான இலவச புலமைப்பரிசில் பரீட்சையை நடாத்தி மாணவர்கள் சமூகத்தில் பொருளாதார ரீதியில் எந்த நிலையில் இருந்தாலும் கணனிக் கல்வியை தொடர இச் சிறப்பான வாய்ப்பை CSC-ASIAN கல்வி நிறுவகம் அளிக்கிறது.

**மெகா இலவச பரீட்சைகள்**

ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே நடைபெறும் இவ் இலவச புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவ மாணவியர் பங்குபற்றி முறையே 40% 50% 60% மற்றும் 75% வரையிலான ஸ்கொலர்ஷிப்பைப் பெற முடியும். 50 நிமிடங்கள் மட்டுமே நடைபெறும் இப்பரீட்சையை தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய விரும்பிய மொழிகளில் எழுதலாம். பொதுஅறிவு, நுண்ணறிவு மற்றும் G.C.E. (O/L) பாடத்திற்கமைவாக 50 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். இப்பரீட்சையை எழுதுவதற்கான அடிப்படைத் தகைமை க.பொ.த. சாதாரண தரம் மட்டுமே.

இப்புலமைப்பரிசில்களுக்கான பாடநெறிகள் அனைத்தும் ICM U.K, IMIS U.K,CSC India, Softview India, Tally India,ICDL U.K கல்வி நிலையங்களில் நேரடி அங்கீகாரம் பெற்றவை. இப் புலமைப்பரிசில் பெறும் மாணவர் ஒருவர் தனக்குரிய பாடநெறிக் கட்டணக் கழிவுடன் உள்நாட்டு, வெளிநாட்டு, உயர் கல்வி, தொழில் வாய்ப்பு மற்றும் சுய தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுத்தரும் கீழ்க்கண்ட பாடநெறிகளை விரும்பிய துறைகளில் தேவைகேற்ப தெரிவு செய்யலாம். அத்துடன் அனைத்துப் பாடப்பிரிவுகளும் Application, Programming, Web Development, Mutimedia என பிரதான நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

**பாடநெறிகள்**

Office Automation
Digital Pre-Press
Web Programming
Digital Video Production
Graphic Design
Tally Accounting
2D& 3D Animation
Maya Animation
Hardware & NetWorking
Adobe Application
Web Animation
Master Diploma in Multimedia
Advance Java programming
Cartoon Animation
Cellphone Servicing & Repairing
Computer Applications
Diploma in Auto CAD
Visual Effects
Graphics & Animation

உதாரணமாக இப்பரீட்சையில்அதிகூடிய 75% ஸ்கொலர்சிப் பெறும் மாணவர் ஒருவர் 25% த்தை மட்டுமே கட்டணமாக செலுத்த வேண்டும். பாடநெறிக்கான கட்ட ணம் 25% மாகக் குறைக்கப்பட்ட போதும் இலவச பாடநூல்களோ , பாட விதானங்களோ (Syllabus) கொடுக்கப்படும் பயிற்சி நேரங்களோ(Practicals) எவ்விதத்திலும் குறைக்கப்படுவதில்லை.

ஏற்கனவே படித்து சான்றிதழ் பெற்ற பல்லாயிரக்கணக்கான மாணவ,மாணவியரே இதற்குச் சான்றாக உள்ளனர். அதுமட்டுமல்லாமல் இம்முறை மெகா SAT பரீட்சையில் பங்குபற்றும் மாணவர்கள் அனைவரும் பயன்பெறும் வகையிலும் சேவை நோக்கத்தைக் கருதியும் "டீடீபி துறையில் வேலைவாய்ப்புப் பெற மற்றும் உங்கள் சந்தேகங்களை நீக்கும் வழிகாட்டி", "டெலி கணக்கியல் மென்பொருள் குறித்த கேள்வி பதில்", "A/L இன் பின்னர் என்ன படிக்கலாம்", "அனிமேஷன் பற்றிய கேள்வி பதில்" மற்றும் "What Next" போன்ற கையேடுகளை இலவசமாக வழங்கவும் CSC ASIAN முன்வந்துள்ளது. அதுமட்டுமல்லாமல் பாடசாலை நூலகங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் கணனிக் கல்வி ஆர்வலர்கள் பயன்பெறும் வகையில் "மல்டிமீடியா" மற்றும் "கொம் யூட்டர்" என இரு பத்திரிகை வடிவிலான ஆக்கங்களை இம்முறை சிஎஸ்சி– ஏசியன் வெளியிடுகின்றது.

இக்கால இளைஞர், யுவதிகள் உள்நாட்டு, வெளிநாட்டு உயர்கல்வி வாய்ப்புக்களை எதிர்பார்த்திருப்பதாலும் சுயதொழில் வாய்ப்புக்களைத் தேடி நிற்பதாலும் அவற்றுக்குப் பலம் சேர்க்கும் வகையில் எமது பாடநெறிகள் அமைந்துள்ளது சிறப்பம்சமாகும்.

ஏசியன் கல்வி நிலையம் 1994 ஆம் ஆண்டு தொடக்கம் 3 ஆம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழு மற்றும் அமைச்சில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். அத்துடன் சிஎஸ்சி மற்றும் Soft view நிறுவனம் தனித்தனியாக சர்வதேச தர நிர்ணயங்களுக்கமைய ISO 9001:2000 சிறப்பு அங்கீகாரச் சான்றிதழ் பெற்றவை.

**இலவச அனுமதிகள்**

2010 இல் A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ICT கல்வியில் ஆர்வமுடையவர்கள் அனைவரும் இப்பரீட்சையில் பங்குபற்றலாம். எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இவ்இலவச பரீட்சைக்கான அனுமதிகளை கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை, மட்டக்குளி, வத்தளை, நீர்கொழும்பு, சிலாபம், வவுனியா, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, நெல்லியடி, வாழைச்சேனை, பண்டாரவளை, மாத்தளை CSC -ASIAN கிளைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

## CSC-ASIAN COMPUTER EDUCATION

இவ்வகையில் படித்தவர்களுக்கும் பொருளாதார வசதி படைத்தவர்களுக்கும் மட்டுமே கணனிக் கல்வி என்ற மாயையை புலமைப்பரிசில் திட்டத்தினூடாக உடைத்தெறிந்த பெருமை ASIAN -CSC யைச் சாரும். அத்துடன் ஸ்கொலர்ஷிப் மூலம் சேர்ந்து படிப்பது உங்கள் கல்விக்கான பெற்றோர்களின் செலவைக் குறைப்பதாகும்.

# இஸ்ரேல் எல்லை அருகே 15 ஆயிரம் ஏவுகணைகள்

(வோஷிங்டன்)

இஸ்ரேல் -லெபனான் எல்லையோரமாக 15 ஆயிரம் ஏவுகணைகளை ஹெஸ்புல்லா தீவிரவாதிகள் வைத்து இருக்கிறார்கள் என்று அமெரிக்காவுக்கான இஸ்ரேல் தூதர் மிக்கேல் ஓரன் தெரிவித்தார்.

அமெரிக்காவில் வோஷிங்டனில் நடந்த ஒரு கருத்தரங்கில் பேசிய அவர் கூறியதாவது,

சிரியா -ஈரான் நாடுகளின் ஆதரவுடன் செயல்படும் ஹெஸ்புல்லா தீவிரவாதிகளிடம் இப்போது அளவுக்கு அதிகமான ஏவுகணைகள் உள்ளன.

2006 ஆம் ஆண்டு லெபனான் யுத்தத்தின் போது தீவிரவாதிகளிடம் இருந்ததை விட 4 மடங்கு ஏவுகணைகள் உள்ளன. இவை நீண்ட தூரம் சென்று தாக்கக்கூடியவை. இஸ்ரேல் நாட்டில் உள்ள அனைத்து நகரங்களும் தாக்கும் தூரத்தில் இவை வைக்கப்பட்டு உள்ளன.

4 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட இப்போது அவர்களிடம் உள்ள ஏவுகணைகள் மிக துல்லியமாக தாக்கும் திறன் படைத்தவை என தூதர் மிக்கேல் கூறினார். (ஸ்ரீ-2)

# பாலஸ்தீன விவகாரங்களில் தலையீடு செய்ய ஈரானிய ஜனாதிபதிக்கு தகுதியில்லை

## பாலஸ்தீன ஜனாதிபதி தெரிவிப்பு

பாலஸ்தீன விவகாரங்களில் தலையீடு செய்ய ஈரானிய ஜனாதிபதி முஹமட் அகமட் நிஜாடிற்கு தகுதி கிடையாதென பலஸ்தீன ஜனாதிபதி முஹமட் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

தேர்தல்களில் மோசடி செய்து ஜனாதிபதி பதவியைப் பெற்றுக்கொண்டதாகவும் அகமட் நிஜாடீனை ஈரானிய மக்களின் தலைவராக ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அமெரிக்கா அனுசரணையில் தற்போது நடைபெற்றுவரும் மத்திய் கிழக்கு பேச்சுவார்த்தைகள் தோல்வியடையும் ஈரானிய ஜனாதிபதி விடுத்த அறிவிப்பிற்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பாலஸ்தீன மக்கள் ஒரு போதும் ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்படவில்லை என ஜனாதிபதி அப்பாஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை பாலஸ்தீனத்தின் தலையெழுத்தை வோஷிங்டனோ அல்லது பாரிசோ தீர்மானிக்க முடியாதென ஈரானிய ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்தப் பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடையும் எனவும் பேச்சுவார்த்தைகளை நடத்துவதனால் காலநேரம் வீண் விரயமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)




# நியுசிலாந்து விமான விபத்தில் இலங்கை விமானி உட்பட 9பேர் பலி

நியூசிலாந்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விமான விபத்தில் இலங்கையைச் சேர்ந்த சமிந்த நளின் சேனாதீர என்ற விமானி கொல்லப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு ஊர்ஜிதம் செய்துள்ளது.

இந்த விபத்தில் விமானி உட்பட 9 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

நியூசிலாந்தின் " ஸ்கை டைவிங்" என்ற நிறுவனமொன்றுக் குச் சொந் தமான சிறிய ரக விமானம் சுற்றுலாத் தள மொன்றிலிருந்து பறக்கத்தொடங்கிய சிறிது நேரத்தில் ஆகாயத்திலேயே தீப்பற்றியதாக தெரிவிக்கப்படுகிறது.

பலியானவர்களில் நால்வர் நியூசிலாந்தைச் சேர்ந்தவர்கள், ஏனையவர்கள் பிரிட்டன், அயர்லாந்து, அவுஸ்திரேலியா மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# டப்ளினில் டோனி பிளேயர் மீது சப்பாத்து,முட்டைகள் வீச்சு

(டப்ளின்)



முன்னாள் இங்கிலாந்து பிரதமர் டோனி பிளேயர் மீது சப்பாத்து,முட்டைகள் வீசி தங்களது எதிர்ப்பைக் காட்டியுள்ளனர் போருக்கு எதிரான ஆர்வலர்கள். இச்சம்பவம் அயர்லாந்து தலைநகர் டப்ளினில் நேற்றுமுன்தினம் நடந்தது.

டோனி பிளேயர் தனது வாழ்க்கைக் குறிப்பு நினைவுகளை ஒரு பயணம் (A Journey)என்ற தலைப்பில் புத்தகமாக எழுதியுள்ளார்.

இந்தப் புத்தகத்தை பிரபலப்படுத்துவதற்காக டப்ளினில் பொது நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதற்காக அவர் நேற்று காரில் வந்திருந்தார்.

டோனி பிளேயர் தனது காரில் இருந்து இறங்குவதற்கு முற்பட்டபோது அங்கு குழுமியிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அவர் மீது ஒரு சப்பாத்து, பல முட்டைகள் உள்ளிட்ட எதிர்ப்பு ஆயுதங்களை வீசினர்.

எனினும் அந்தத் தாக்குதலில் இருந்து டோனி பிளேயர் இலாவகமாக தப்பியதுடன் அவர் மீது எதுவும் படவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதைத் தொடர்ந்து அயர்லாந்து பொலிஸின் பாதுகாப்பு வலயத்திற்குள் வந்த டோனிப் பிளர் பாதுகாப்பாக கொண்டு செல்லப்பட்டார்.

பிளேயர் தனது புத்தகத்தில் ஈராக் போரை நியாயப்படுத்தி சில விடயங்களை எழுதியிருக்கிறார். மேலும் இஸ்லாமிய தீவிரவாதம் குறித்து அவர் கூறிய கருத்தும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

டப்ளினில் பிளேயருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் *அவரது கரங்கள் இரத்தக் கறை படிந்தது* என கோஷமெழுப்பினர்.

இந்தச் சம்பவத்தால் டப்ளினில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. (ஸ்ரீ-2)

# நிதிநெருக்கடியில் தலிபான்கள் ; அமெ.இராணுவத்தளபதி தெரிவிப்பு

(வோஷிங்கடன்)

ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான்கள் செலவுக்குப் பணம் இல்லாமல் திணறுகிறார்கள் என்று அந்த நாட்டில் தலிபான்களை ஒடுக்குவதற்கு அனுப்பப்பட்டு இருக்கும் அமெரிக்க இராணுவத் தளபதி ரிச்சர்ட் மில்ஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்துப் அவர் நிருபர்களிடம் கூறுகையில்,

தலிபான்கள் நிதி நெருக்கடியில் சிக்கியிருப்பதாக உளவுத்துறைக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. நிதி வருவாய்க்கு ஆதாரங்களாக உள்ள கஞ்சா வியாபாரத்தை அமெரிக்கா இராணுவம் ஒடுக்கி விட்டது .இது தான் நிதி நெருக்கடிக்கு காரணம் ஆகுமென இராணுவத்தளபதி ரிச்சர்ட் கூறினார். (ஸ்ரீ-2)

# மெக்சிகோ, டுபாயில் விமான விபத்து; எம்.பி.க்கள் உட்பட எட்டுப்பேர் பலி

(ஓயாக்சகா)

மெக்சிகோவில் நடந்த விமான விபத்தில் இரண்டு எம்.பிக்கள், மேயர் ஒருவர் உட் பட ஆறு பேர் பலியாகினர்.அதேபோல் டுபாயில் சரக்கு விமானம் விழுந்து நொறுங்கியதில் விமானிகள் இரண்டு பேர் பலியாகினர்.

இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதா வது,



மெக்சிகோ நாட்டின் மெக்சிகோ நகரத்திலிருந்து அதன் தென்பகுதியிலுள்ள ஓயாக்சகா நகர் அருகிலுள்ள ஹுவாட்லுகோ என்ற இடத்துக்கு ஒரு விமானம் கடந்த வெள்ளிக்கிழமை சென்றது. அந்த விமானத்தில் இரண்டு எம்.பி.க்கள் ஓயாக்சகா நகரின் மண்டல மேயர், ஒரு விமானி மற்றும் இரண்டு பேர் இருந்தனர். செல்லும் வழியில் விமானம் திடீரென விழுந்து விபத்துக்குள்ளானது. விமானத்தில் பயணம் செய்த ஆறு பேரும் அதில் பலியாகினர்.

இதேவேளை விமான விபத்துக்கு மோசமான வானிலை அல்லது விமானியின் தவறு காரணமாக இருக்கலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேபோல் டுபாய் சர்வதேச விமான நிலையம் அருகே அமெரிக்க நிறுவனம் ஒன்றிற்குச் சொந்தமான சரக்கு விமானம் விழுந்து நொறுங்கியதில் விமானி இருவர் பலியாகினர். சம்பவம் நடந்த இடத்தில் யாரும் இல்லாததால் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. (ஸ்ரீ-2)

# ஆப்கானிஸ்தான் தேர்தலில் முதன்முறையாக பெண் உட்பட இரண்டு சீக்கியர்கள் போட்டி

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தேர்தலில் முதன் முறையாக ஒரு பெண் வேட்பாளர் உட்பட 2 சீக்கியர்கள் போட்டியிடுகின்றனர். முஸ்லிம் நாடான ஆப்கானிஸ்தானில் இந்துக்களும் சீக்கியர்களும் சிறுபான்மையினராக வாழ்ந்து வருகின்றனர். அந்நாட்டு பாராளுமன்ற கீழ் சபைக்கு எதிர்வரும் 18ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தலில் பிரிட்பால் சிங் (வயது 44) என்பவரும் அனார்கலி கவுர் (வயது 26) என்ற பெண்ணும் போட்டியிடுகின்றனர். சீக்கிய சமயத்தைச் சேர்ந்த இவர்கள் காபூல் தொகுதியில் முன்னாள் முஜாகிதீன் கொமாண்டர்கள் முகமது மொகாகிக் மற்றும் அப்துல் ரசல் சோயப் ஆகியோரை எதிர்த்து சுயேட்சையாக போட்டியிடுகின்றனர். பிரிட்பால் சிங்கும் அவரின் பெற்றோரும் ஆப்கானில் பிறந்தவர்கள் பிரிட்பால் சிங் ஆயுள்வேத மருந்துக் கடை ஒன்றை நடத்தி வருகிறார் தற்போது தேர்தல் பிரசாரத்தில் பிரிட்பால் சிங் தீவிரமாக இருப்பதால் கடையை அவரது தந்தை கவனித்துக்கொள்கிறார்.

தேர்தலில் போட்டியிடுவது குறித்து பிரிட்பால் சிங் கூறுகையில் ஆப்கானில் இந்துக்களும் சீக்கியர்களும் சிறுபான்மையினராக வாழ்கின்றனர். அனைவரும் ஆப்கான் குடிமக்கள் என்றாலும் அவர்களின் மூதாதையர்கள் பல தலைமுறைகளுக்கு முன் இந்தியாவிலிருந்து வந்து குடியேறியவர்கள் .

சிறுபான்மையினர் என்ற காரணத்தினால் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்து வருகின்றனர். இடுகாட்டில் கூட பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடுகிறது. எனவே நான் தேர்தலில் போட்டியிட்டு மக்களுக்கு சேவை செய்ய விரும்புகிறேன் நான் சீக்கியனாக இருந்தாலும் ஆப்கான் குடிமகன் எனவே மதவேறுபாடுகளைக் கடந்து அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சேவை செய்வேன் இவ்வாறு அவர் கூறினார்.

மற்றொரு வேட்பாளரான அனார்கலி கவுரும் அவரது பெற்றோரும் ஆப்கானில் பிறந்தவர்கள் கவுரின் தந்தை கிஷன் சிங் பொறியியலாளர் கவுர் பல் வைத்தியர் ஆப்கான் மனித உரிமை அமைப்பிலும் அவர் உறுப்பினராக உள்ளார். (ஸ்ரீ-2)

# தொண்டு நிறுவனங்களின் வெளிநாட்டுப் பணியாளர்கள் குறித்த தகவல்கள் புலனாய்வுப்பிரிவினரிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

தன்னார்வத்தொண்டு நிறுவனங்களில் பணியாற்றி வரும் வெளிநாட்டுப் பணியாளர்கள் தொடர்பான தகவல்கள் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டுக்குள் பிரவேசிக்கும் சகல வெளிநாட்டு தன்னார்வத்தொண்டு நிறுவனப் பணியாளர்களும் புலனாய்வுப் பிரிவினரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச தன்னார்வத்தொண்டு நிறுவனங்களைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளின் ஓர் கட்டமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை புலனாய்வுப் பிரிவினரின் அனுமதி கிடைக்கப் பெற்ற வெளிநாட்டு தன்னார்வத் தொண்டர்களே இலங்கையில் பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவர் என தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

புலனாய்வுப் பிரிவினர் அனுமதி அளிக்காத பட்சத்தில் குறித்த பணியாளர்களின் விசா இரத்து செய்யப்படும் அல்லது விசா நீடிக்கப்படாது என அவர் அறிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் எந்தவொரு தன்னார்வத்தொண்டு நிறுவனமும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நேரடித் தொடர்புகளைப் பேணியமைக்கான சாட்சியங்கள் கிடைக்கப் பெறவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஶ்ரீ-2)

# யுத்தத்தின் பின்னரான அபிவிருத்தி தொடர்பில் ஜனாதிபதி ஐ.நா.வில் விளக்கமளிப்பார்

## ரோஹித போகொல்லாகம தெரிவிப்பு



(கொழும்பு)

யுத்தத்தின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் சபையில் விளக்கமளிக்கவுள்ளதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் ஜனாதிபதி நாடு அடைந்துள்ள அபிவிருத்தி தொடர்பில் உறுப்பு நாடுகளுக்கு விளக்கமளிக்கவுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் யுத்த ரீதியாக தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பில் ஜனாதி பதி உரையாற்றவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு-கிழக்கில் பாரிய அபிவிருத்தித் திட்டங் கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும்,

யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் இலங்கை தொடர்பாக உலக நாடுகளுக்கு அறிவிப்பதற்கான சந்தர்ப்பமாக ஜனாதிபதி ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தை பயன்படுத்திக் கொள்வார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஶ்ரீ-2)

# தம்மை விடுவிக்கக் கோரி மகசின் சிறைச்சாலை தமிழ் அரசியல் கைதிகள் ஜனாதிபதிக்கு கடிதம்

மகசின் சிறைச்சாலையில் சந்தேகத்தின் பெயரில் பல வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் தங்களை விடுதலை செய்யுமாறு கோரி கடிதம் ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

மகசின் சிறைச்சாலையில் 5 தொடக்கம் 17 வருடங்களாகச் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளாகிய நாங்கள் எங்கள் விடுதலை தொடர்பான கோரிக்கைகள் முன்வைத்தும் இதுவரையில் அதுபற்றிய நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

இத்தனை வருட காலமாக துன்பங் களையும் மனதில் அடக்கிக் கொண்டு மன உளைச்சலுடன் வாழ்ந்து வரும் எங்களை விடுதலை செய்யுங்கள். இவ்வாறு தெரிவிக்கும் கடிதம் ஒன்றைஜனாதிபதிக்குஅனுப்பிவைத்துள்ளனர்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தடுப்புக் காவலில் உள்ள எங்கள் அனைவரையும் சந்தித்து கலந்துரையாடி சென்றனர். மனதில் ஓரளவிற்கு மகிழ்ச்சியாக இருந்தாலும் நாட்டின் ஜனாதிபதியான தாங்ள் எங்களை சந்திக்கவில்லை என்ற கவலை தமிழ் அரசியல் கைதிகளாகிய எங்கள் அனைவர் மனதிலும் உண்டு.

ஆனால் எதிர்வரும் சிறைச்சாலைகள் தினத்தில் சிறைச்சாலைகளுக்குச் சென்று கைதிகளை பார்வையிடப் போவதாக ஊடகங்களில் தகவல் தெரிவித்திருப்பதானது கைதிகளாகிய எங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியை தருவதோடு கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளான எங்களை நீங்கள் ஒரு முறையாவது வந்து பார்த்து எங்கள் கஷ்ட நிலைவரங்களை கேட்டறிந்தால் அனைவரது குடும்ப நிலைவரங்கள் மட்டுமன்றி எங்கள் துயரங்களையும் மன வேதனைகளையும் அறிந்து கொள்ள முடியும்.

சந்தேகத்தின் பெயரில் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள நாங்கள் கண்ணீருடன் பல கடிதங்களை ஊடகங்கள் மூலம் தெரிவித்திருந்தும் எவரும் எமக்கு உதவ முன்வர வில்லை. இந்நாட்டின் பிரஜைகளாகிய நாங்கள் அனைவரும் வாழ்நாளின் அரைவாசி காலத்தினை சிறைக்கூடத்திலேயே கழித்து விட்டோம். இனிவரும் காலங்களிலாவது வெளி யுலகத்தில் வாழ வழியேற்படுத்தித் தாருங்கள்.

எங்களை விடுதலை செய்யுமாறு கெஞ்சி கேட்கிறோம். நாங்கள் தவறு செய்திருந்தாலும் மன்னிப்பு கிடையாதா? நாங்கள் வாழ்வதற்கு அருகதையற்றவர்களா? உங்கள் ஒருவரால்தான் எங்களுக்கு விடிவைத் தேடித்தர முடியும். அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு கம்பிக் கூண்டுக்குள் இத்தனை வருடங்களாக இருக்கும் எங்களைபொது மன்னிப் பின் கீழ் விடுதலை செய்யுங்கள்.

இந்நாட்டின் பிரஜைகளாகிய நாங்கள் உங்கள் பிள்ளைகள் எங்களுக்கு புதுவாழ் வளிப்பீர்கள் என நம்பிக்கையுடன் எதிர் பார்த்திருக்கிறோம் என்று அம்மடலில் வரையப்பட்டுள்ளது.

(ஶ்ரீ-2)

# இலங்கையில் 3 புகலிடக் கோரிக்கையாளர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்

## சர்வதேச மன்னிப்புச்சபை குற்றச்சாட்டு

(கொழும்பு)

மூன்று புகலிடக் கோரிக்கையாளர்கள் இலங்கையில் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சுமத்தியுள்ளது.

புகலிடக்கோரிக்கை மறுக்கப்பட்டு அவுஸ்திரேலியாவிலிருந்து மீண்டும் நாடு கடத்தப்பட்ட மூன்று இலங்கையர்களே இவ்வாறு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சுமித் மெண்டிஸ் மற்றும் லசந்த விஜேரட்ன ஆகிய இரண்டு புகலிடக் கோரிக்கையாளர்கள் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடு கடத்தப்பட்ட மூன்றாவது நபரின் நிலைமை தெளிவாகவில்லை என சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

சட்டவிரோத ஆட்கடத்தல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் குறித்த மூன்று பேரையும் அவுஸ்திரேலிய அரசாங்கம் அண்மையில் இலங்கைக்கு நாடு கடத்தியிருந்தது.

புகலிடக் கோரிக்கையாளர்களின் நிலைமை தொடர்பில் அவுஸ்திரேலிய மற்றும் இலங்கை அரசாங்கங்கள் பொறுப்புக்கூற வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குறித்த நபர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்படக்கூடாது எனவும் அவர்களின் பாதுகாப்பை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பிராந்திய பிரதிப்பணிப்பாளர் மதுமல் ஹோத்ரா தெரிவித்துள்ளார்.

(ஶ்ரீ-2)


Mega SAT

After O/L & A/L Join CSC-ASIAN

மெகா ஸ்கொலர்ஷிப் 2010

Win 75% SCHOLARSHIP

கொம்ப்யூட்டர் உயர்கல்விக்கான இலவச புலமைப்பரிசில் பரீட்சை

இலவச பரீட்சை

செப்டெம்பர் 12th ஞாயிறு

கொம்ப்யூட்டர் புலமைப்பரிசில்

- பரீட்சை அனுமதி முற்றிலும் இலவசம்
- பரீட்சையை தமிழ் or ஆங்கிலத்தில் எழுதலாம்
- அடிப்படைத் தகைமை G.C.E. (O/L)
- வினாத்தாள் 50 நிமிடங்கள் மட்டுமே
- O/L பாடத்திட்டம் மற்றும் பொது அறிவு வினாக்கள்
- 75% வரையான ஸ்கொலர்ஷிப் (கட்டணக்கழிவு)
- இலவச பாடநூல்கள் (இந்தியா & இலங்கை)
- தவணைமுறை கட்டண வசதி
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்

O/L, A/L பரீட்சைகளின் பின் Why Pay More?

உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ICT துறையில் ஆர்வம் உள்ளவர்கள் அனைவரும் மெகா இலவச புலமைப்பரிசில் பரீட்சையில் பங்குபற்றி, பெறும் மதிப்பெண்களுக்கமைய 75% வரையிலான ஸ்கொலர்ஷிப்பைப் பெற்றுக்கொள்ளலாம்.



Collect Your Free Admission Card, Today !

விரையுங்கள், வெற்றிபெறுங்கள் !

CSC®-ASIAN COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677

கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-2262399

230, 1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி. T.P : 021-2270267

# வடக்கிலுள்ள இடம்பெயர் மக்கள் வாக்குரிமையை இழக்கக்கூடிய அபாயத்தை எதிர்நோக்குகின்றனர்

## கபே அமைப்பின் பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடகிக்கிலுள்ள இடம்பெயர் மக்கள் வாக்குரிமையை இழக்கக் கூடிய அபாயங்களை எதிர்நோக்கி வருவதாக முன்னணி தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களில் ஒன்றான கபேயின் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு மூன்று மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் சில பிரதேசங்களில் இடம்பெயர் மக்களுக்கு விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப் பெறவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போதியளவு கிராம உத்தியோகத்தர்கள் இன்மை மற்றும் உரிய வசதிகள் இன்மை ஆகிய காரணிகளினால் வாக்காளர் பதிவு மிகவும் மந்தகதியில் நடைபெற்று வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் வடக்கு மக்களின் அடிப்படை உரிமைகளின் ஒன்றான வாக்குரிமை இழக்கப்படக்கூடிய அபாயம் காணப்டுவதாகவும் 450 கிராம சேவை பிரிவுகளில் 30 பிரிவுகளில் மட்டுமே வாக்காளர் பதிவு நடத்தப்பட்டுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் வாக்காளர் பதிவு பூர்த்தியாகியுள்ள போதிலும் யாழ்ப்பாணத்தில் இன்னமும் பெரும்பகுதி மக்கள் பதியப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆளணிப் பற்றாக்குறையினால் வாக்காளர் பதிவு தாமதப்படுத்தப்படுவதாகவும் உடனடியாக மேலதிக உத்தியோகத்தர்கள் வடக்கிற்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# அரசியல் யாப்பு சீர்திருத்தம் சிறுபான்மை மக்களுக்கு பாதகமாகவே அமையும்

## கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் யாப்பு சீர்திருத்தம் வடகிழக்கு மண்ணிலே வாழுகின்ற சிறுபான்மை மக்களுக்கு பாதகமாகவே அமையும். அதில் பாதகமான விளைவுகள் அதிகமுள்ளதாக அறியக்கிடைக்கின்றது.

இவ்வாறு மட் டக்களப்பு திருமலை மறைமாவட்ட ஆயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அளித்துள்ள விசேட செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

வடகிழக்கு மக்கள் ஏற்கனவே துன் புறுத்தல்களுக்கும் வேதனைகளுக்கும் ஆளானவர்கள். இப்பிரேணை மூலம் இன்னும் வேதனை கொள்ளச் செய்யுமானால் இது பாதகமான விளைவுகளையே கொண்டு வரும் இம்மக்களை ஆண்டவர் ஒருவரைத் தவிர யாராலும் காப்பாற்ற முடியாது எனத் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# 35 வருடங்களாக போலி ஆசிரியராக கடமையாற்றிய நபர் கண்டு பிடிப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் சித்தி அடையாது போலிப் பத்திரத்தைச் சமர்ப்பித்து ஆசிரியர் தொழில் பெற்று கடந்த 35 வருடங்களாகப் போலி ஆசிரியராக கடமையாற்றி ஓய்வில் சென்றுள்ள நபரின் தில்லு முல்லுகள் தற்போது அம்பலத்துக்கு வந்துள்ளன.

மாத்தறை கல்வி வலயத்தைச் சேர்ந்த குறித்த ஆசிரியர் பற்றி தற்போது விரிவான விசாரணையை மாத்தறை கல்வித் திணைக்களமும் தென்மாகாணக்கல்வி அமைச்சும் தீவிரமாக மேற்கொண்டுள்ளன.

கடந்த 1971ஆம் ஆண்டு ஜுலை 20 ஆம் திகதி வெளியான கல்விப் பொதுத் தராதர பெறுபேற்றில் திருத்தம் செய்து போலிப் பத்திரத்தை சமர்ப்பித்து இவ் ஆசிரியர் நியமனத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார் என்றும் தற்போது தனது ஓய்வூதிய கணக்குகளைப் பார்ப்பதற்காக மாத்தறை வலயக் கல்விக் காரியாலயத்துக்குச் சென்ற போது ஸ்திரமற்ற ஆசிரியர் எவ்வாறு ஓய்வூதியம் பெற முடியும் ? என்ற சர்ச்சை ஏற்பட்டபோது இந்த விபரம் தெரிய வந்ததையடுத்து விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஸ்ரீ-2)

# மற்றொரு எம்.பி.மீது அரசின் கழுகுப் பார்வை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்பில் தற்போது அரசாங்கத்தின் பார்வை திரும்பியுள்ளது. புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டாரவே அவராகும். 6 மாதங்களுக்கு முன்னர் அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் ஒருவரால் தாக்கப்பட்டார்.

எனினும் குறித்த உறுப்பினருக்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சி இன்னமும் உரிய நடவடிக்கையை எடுக்கவில்லை என பாலித ரங்கே பண்டார குற்றம் சுமத்தி வருகிறார்.

இந்த நிலையில் அரசாங்கத்தின் 18 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கு அவர் ஆதரவளிப்பார் என அரசாங்க தரப்பு நம்புகிறது.

எனினும் தாம் தமது முடிவை எதிர்வரும் புதன்கிழமையன்றே வெளிப்படப்போவதாக பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள இடதுசாரியான வாசுதேவ நாணயக்கார தமது முடிவை ஏனைய இடதுசாரிகளுடன் பேசிய பின்னர் இன்று அறிவிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

(ச-5)

# 06.09.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

### நிகழ்வுகள்

- 1620- வட அமெரிக்காவில் குடியேறுவதற்காக இங்கிலாந்தின் பிளைமவுத் துறையில் இருந்து யாத்திரிகர்கள் புறப்பட்டனர்.
- 1776 - கரிபியன் தீவான குவாதலூப்பேயை சூறாவளி தாக்கியதில் 6000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1861 -அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் கென்டக்கியின் படுக்கா நகரைக் கைப்பற்றினர்.
- 1863 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புப் படைகள் தென் கரோலினாவின் மொரிஸ் தீவில் இருந்து விலகினர்.
- 1885 - கிழக்கு ருமேலியா பல்கேரியாவுடன் இணைந்தது.
- 1901 - அமெரிக்க ஜனாதிபதி வில்லியம் மக்கின்லி நியூயோர்க்கில் சுடப்பட்டுப்படுகாயமடைந்தார்.
- 1930 - ஆர்ஜெண்டீனாவின் ஜனாதிபதி ஹிப்போலிட்டோ இரிகோயென் இராணுவப் புரட்சியை அடுத்து பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- 1932 - கனடாவின் முதலாவது தொலைக்காட்சி நிலையம், CBFT - TV மொன்ட்றியாலில் திறக்கப்பட்டது.
- 1936 - கடைசி தாஸ்மானியப் புலி தாஸ்மானியா, ஹோபார்ட்டில் இறந்தது.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: தென்னாபிரிக்கா ஜேர்மனியுடன் போரை அறிவித்தது.
- 1946- இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சி டி.எஸ்.சேனநாயக்காவினால் ஆரம்பிக்கப்பட்டது.
- 1951 - தினமலர் நாளிதழ்ஆரம்பிக்கப்பட்டது
- 1955 - துருக்கியில் இஸ்தான்புல் நகரில் கிரேக்கர்களுக்கும். ஆர்மீனியர்களுக்கும் எதிராக இனக்கலவரங்கள் இடம் பெற்றன. பத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.
- 1965 - இந்தியா - பாகிஸ்தான் போர், 1965: இந்தியா பாகிஸ்தானைத் தாக்கி, லாகூரை ஒரு மணி நேரத்தில் கைப்பற்றப் போவதாக அறிவித்தது.
- 1966 - தென்னாபிரிக்க பிரதமர் ஹெண்ட்ரிக் வேர்வேர்ட் நாடாளுமன்ற அமர்வின் போது குத்திக் கொலை செய்யப்பட்டார்.
- 1968 - சுவாசிலாந்து ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1970 - ஐரோப்பாவில் இருந்து நியூயோர்க் சென்று கொண்டிருந்த இரண்டு பயணிகள் விமானங்கள் பாலஸ்தீனத் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு ஜோர்தானுக்குக் கொண்டு செல்லப்பட்டது.
- 1990 - யாழ்ப்பாணக் கோட்டை மீதான புலிகளின் முற்றுகையின் போது இலங்கையின் குண்டுவீச்சு விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.
- 1991 - ரஷ்யாவின் லெனின்கிராட் நகரம் மீண்டும் சென் பீட்டர்ஸ்பேர்க் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- 1997 - வேல்ஸ் இளவரசி டயானாவின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. 2.5 பில்லியன் மக்கள் தொலைக்காட்சி மூலம் இந்நிகழ்வைப் பார்த்தனர்.
- 2006 - ஐரோப்பியத் தமிழ் வானொலி, மக்கள் தொலைக்காட்சி ஆகியன ஆரம்பிக்கப்பட்டன.

### பிறப்புகள்

- 1968 - சயிட் அன்வர், பாகிஸ்தானின் துடுப்பாளர்

### இறப்புகள்

- 1998 - அகிரா குரோசாவா, ஜப்பானியத் திரைப்படத் தயாரிப்பாளர் (பி. 1910)
- 2007 - லூசியானோ பவரொட்டி, இத்தாலியப் பாடகர் (பி.1935)

1522 - பேர்டினண்ட் மகலனின் விக்டோரியா கப்பல் உயிர் தப்பிய 18 பேருடன் ஸ்பெயினை வந்தடைந்து, முதன் முதலில் உலகைச் சுற்றி வந்த கப்பல் என்ற பெயரைப் பெற்றது.




# ஈழத்தவர் வரலாறு

27

## 4. சிங்கை நகர் அரசு

### (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)



முதலாம் பராக்கிரமபாகு

கி.பி.10 ஆம் நூற்றாண்டளவில் பூநகரிப் பிரதேசம் சோழரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது என்பதற்கு ஆதாரங்களுள்ளன. அவ்வேளையில் அப்பிரதேசத்தின் சோழப்பிரதிநியாகவிருந்த புவனேகபாகு, பூநகரியில் இன்று விளங்குகின்ற நல்லூர் என்ற பகுதியில் தனது மாளிகையை அமைத்திருக்கவேண்டும், உண்மையில் இன்று கிடைக்கின்ற ஆதாரங்களிலிருந்து பூநகரியில் இன்று இருக்கின்ற நல்லூர் என்ற பிரதேசமே தமிழர் அரசின் புராதன நல்லூர் ஆகும் எனக்கொள்வதில் தவறு இல்லை. தென்னிந்தியாவின் பல ஊர்களுக்கு நல்லூர் எனப் பெயருள்ளது.

ஆகவே, அத்தகைய ஒரு பெயர் பூநகரியிலுள்ள இந்தப் பிரசேதத்திற்கும் சோழரால் இடப்பட்டிருந்தது எனக் கொள்ளலாம்.

முதலாம் பராந்தகன் ஆட்சியில் தான் தமிழ் நாட்டிலுள்ள சோழ மண்டலமும் மண்ணியாறும் இதன் தென் எல்லையிலுள்ள நல்லூரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாகக் கூறப்பட்டுள்ளன.

குஞ்சரமல்லன் என்ற பராந்தகனின் சிறப்புப் பெயர் மண்ணியாற்றி மறுபெயராக அழைக்கப்பட்டது. பூநகரியில் இராசதானிக்குரிய கட்டட அழிபாடுகளின் தென்னெல்லையில் சோழமண்டலமும், வடவெல்லையில் மண்ணியாறும் அதற்குச் சற்று வடக்காக நல்லூர் என்ற இடமும் காணப்படுகிறது.

பதினோராம் நூற்றாண்டில் இலங்கையிலிருந்து சோழரைத் துரத்திவிட்டு, இலங்கை முழுவதற்கும் முதலாம் விஜயபாகு (1055-1110) அரசனானான். அவன் ஆட்சிக் காலத்தில் வடவிலங்கை அவனாட்சியின் கீழ்ப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்த புராதன பௌத்த விகாரைகளுள் ஒன்றாகிய ஜம்புக்கோல விகாரையை மீள அமைத்தான் என சூளவம்சம் கூறுவதிலிருந்து இது உறுதிப்படுகின்றது.

விஜயபாகு இறந்த பின் கி.பி.1110 ஆம் ஆண்டளவில் குலோத்துங்க சோழன், சோழராட்சியை மீண்டும் நிலை நாட்ட இலங்கை மீது படையெடுத்தான். அப் படைக்குத் தலைமை தாங்கி வந்தவன் கருணாகரத் தொண்டைமான் என்னும் தளபதியாவான். அவன் யாழ்ப்பாணத்தைச் சிலகாலம் நிர்வகித்தான் என நம்ப இடமுள்ளது.

தொண்டைமானாற்றைத் துறைமுகமாக் குவித்தான். தொண்டைமானாற்றில் விளைந்த தன்படுவான் உப்பை (தானாக விளையும் உப்பு) சோழ நாட்டிற்கு ஏற்றுவித்தான். உரும்பிராயிலுள்ள கருணாகரப் பிள்ளையார் கோயிலை இவனே அமைப்பித்தான்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில், உத்தர தேச அரசு , தென்னிலங்கை ஆட்சியாளரின் ஆதிக் கத்தினுள் மீண்டும் உட்பட்டது. அவ்வேளை முதலாம் பராக்கிரமபாகு (கி.பி.1153-1286) இலங்கையின் மன்னனாக இருந்தான். இதற்கு ஆதாரமாக நயினாதீவில் அகப்பட்ட கல்வெட்டொன்றும், தென்னிந்தியாவில் திருவாலங்காட்டிலே கிடைத்த கல்வெட்டொன்றும் ஆதாரமாகவுள்ளன.

முன்னதில் ஊர்காவற்றுறையிலே நடை



உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோவில்

பெற்ற கடல் வாணிபம் பராக்கிரமபாகுவின், ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது என்பதையும், பின்னதில் ஊறாத்துறை, மட்டிவால், வல்லிக்காமம், ஆகிய இடங்களிலே பராக்கிரமபாகுவின் கடற்படை நிறுத்தப்பட்டிருந்தது என்பதை அறிய முடிகின்றது.

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்


பதின்மூன்றாம் நூற்றாண்டின் நடுப் பகுதிவரை சிங்கைநகர் வடவிலங்கையின் தலைநகரமாகவும் , இந்த அரசு சோழரின் ஆதிக்கத்தினுள்ளும் இருந்தது. (தொடரும்)

**ஈழத்தவர் வரலாறு என்னும் தலைப்பில் கலாநிதி க.குணராசா (செங்கையாழியான் ) எழுதிய தொடரில் நாளை முதல் யாழ்ப்பாண இராச்சியம்: ஆரியச்சக்கரவர்த்திகள் என்னும் தொடர் பிரசுரமாகும்.**

# புலம்பெயர் சிற்றிதழ்களின் அரசியல்

03

### செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை



சுப்பிரமணியம் குணேஸ்வரன்
B.A(Hons),PGDE,M.Phil
ஆசிரியர்,
வ/மதியாமடு விவேகானந்தா வித்தியாலயம்.

**பெண்ணிய எழுத்துக்கள்**

மேற்குலகில் பேசப்பட்ட பெண்ணிய அரசியல் தமிழ்நாட்டிலும் புகலிடத்திலும் மேலும் முன்னெடுக்கப்பட்டபோது பெண்கள் தங்கள் பிரச்சினைகள் பற்றித் தாமே பேசவும், தமக்கெதிரான வன்முறைகளை எதிர்க்கவும், இலக்கியத்தில் புதிய பாய்ச்சல்களை நிகழ்த்தவும் தலைப்பட்டனர். இதற்கு புகலிடத்திலிருந்து வெளிவந்த சிற்றிதழ்கள் அவர்களின் கருத்துக்களைச் சுமந்து செல்வதற்கான ஊடகமாக இருந்துள்ளன.

ஆரம்பத்தில் வெளிவந்த சஞ்சிகைகளை ஆண்களே எழுதி வந்தாலும் அவர்கள் இயக்க செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் என்பதனால் இயல்பாகவே பெண்கள் தொடர்பாக முற்போக்குப் பார்வையுடன் தமது கருத்துக்களை முன்வைத்தனர். ஆனால் அவை ஆணாதிக்க மனோநிலையுடன் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது.

பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகளை எதிர்ப்பது பெண் எழுத்துக்களின் முதற்கட்டமாக இருந்தது. மறுபுறம் ஆணாதிக்க கருத்தியல் மனோபாவத்துடன் எழுத்துக்களை மறுத்து பெண்ணிய அரசியலை முன்வைக்கும் படைப்புக்களை எழுதுவது என்பது அதன் இரண்டாவது கட்டமாக இருந்தது. இதனாலேயே பெண்ணிய எழுத்துக்கள் பெண்களிடம் இருந்தே வரவேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது.

இந்த அடிப்படையில் வெளிவந்த சிற்றிதழ்களுள் கண், சக்தி, ஊதா ஆகியனவும் ஊடறு, பெண்கள் சந்திப்பு மலர் ஆகிய மலர் வெளியீடுகளும் கவனத்திற் கொள்ளத்தக்கவையாகும்.

**புதிய கதைகளும் புதிய வடிவங்களும்**

மாற்றுக் கருத்துள்ளவர்களும் ஏற்றுக் கொள்ளக்கூடியவாறு சில சஞ்சிகைகளில் வெளிவந்த படைப்புக்கள் அமைந்திருந்தன. அவற்றின் நோக்கம் தனியே அரசியலை முன்னெடுப்பது மட்டுமல்ல. நவீன இலக்கியத்தின் அண்மைக்காலப் போக்குகளையும் முன்னெடுப்பதாகும். அம்மா, உயிர்நிழல், எக்ஸில், காலம் ஆகிய சிற்றிதழ்கள் தொடர்ந்து இப்பணியைச் செய்துள்ளன.

ஆக்க இலக்கியங்களாகிய கவிதை, சிறுகதைகளில் வித்தியாசமானவற்றை முன்வைத்தமோடு வடிவம் சார்ந்த மீறல்களையும் நிகழ்ந்த இச் சிற்றிதழ்கள் இடங்கொடுத்தன. அம்மா, உயிர்நிழல், எக்ஸில் ஆகியவற்றில் வெளிவந்த சிறுகதைகளிற் சில புதிய வடிவங்களையும் புதிய கதைகளையும் முன்வைத்ததோடு சில கதைகள் தொடர்ச்சியான விமர்சனத்துக்கும் உள்ளாகின. கலாமோகன், அரவிந் அப்பாத்துரை, நா. கண்ணன், ஷோபாசக்தி ஆகியோரின் கதைகள் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டமைக்கு அவை எடுத்துக்கொண்ட புதிய கதைகளும் வடிவமும் காரணமாயின. இதேபோல் கவிதைகளும் கவனத்திற்கொள்ளப்பட்டன. பின் நவீனத்துவம், தலித்தியம், பெண்ணியம், எதிர்ப்பிலக்கியம் ஆகியவற்றில் மிகக்கூடிய கவனம் செலுத்தியமையால் தமிழ் நாட்டு சிற்றிதழ்களுக்கு இணையாக இவை மதிப்பிடப்பட்டன.

**முடிவுரை**

புலம்பெயர் இலக்கியம் அனைத்து மட்டத்திற்கும் முன்னெடுத்துச் செல்லப்படுவதற்கு சிற்றிதழ்களின் அளப்பரிய பணியினை ஆற்றியுள்ளன. இன்று புலம் பெயர் இலக்கியம் என்ற அடையாளத்தை தாங்கி வந்துள்ள பல தொகுப்புக்கள் ( எஸ்.பொ. இந்திரா பார்த்தசாரதி தொகுப்பில் வெளிந்த 'பனியும் பனையும்' மு.திருநாவுக்கரசு தொகுத்த "புலம்பொய்ந்தோர் கவிதைகள்" திருச்சியிலிருந்து வெளியிடப்பட்ட புலம் பெயர்ந்தோர் மாநாட்டு மலர், அ ஆ இ சஞ்சிகையினர் தொகுத்த சிறுகதைச் சிறப்பிதழ்) என்பன இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

சிற்றிதழ்களிலேயே ஆரம்பத்தில் வெளிவந்துள்ளன. தொடர்ச்சியாக அந்த இதழ்களில் வெளிவந்த புனைவு சாரா எழுத்துக்கள் தொகுப்பு வடிவமாக்கப்படும்போது புலம்பெயர் சிற்றிதழ்களின் அரசியலை மேலும் நுண்மையாக நோக்குவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

இந்த வகையில் புகலிட இலக்கியப் பரப்பில் தட்டிக்கழிக்க முடியாத ஆய்வுக்குரிய மூலாதாரங்களாக புலம்பெயர் சிற்றிதழ்கள் அமைந்துள்ளன எனலாம். (முற்றும்)

# உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவில் மேலும் பல முக்கியஸ்தர்கள் சாட்சியமளிக்கவுள்ளனர்

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் முன்னிலையில் மேலும் பல முக்கியஸ்தர்கள் சாட்சியமளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊடகவியலாளர்கள், ஆளும் கட்சி அமைச்சர்கள், அமைச்சு செயலாளர்கள் என பல்வேறு தரப்பினர் சாட்சியமளிக்கவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஆசியான் ட்ரிபியூன் இணையத் தளத்தின் ஆசிரியர் கே.டி.ராஜசிங்கம், வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் அனுர ஏக்க நாயக்க, ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின் தலைவர் சுசந்த ரட்நாயக்க ஆகியோர் எதிர்வரும் நாட்களில் சாட்சியமளிக்க உள்ளனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான், சமாதானப் பேரவையின் முன்னாள் தலைவர் ஜோன் குணரட்ன, அங்கிலிக்கன் பேராயர் டுலிப் டி சிக்கேரா, சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர், வெளிவிவகார அமைச்சின் முன்னாள் பிரதிச் செயலாளர் நந்தகொடகே, முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளர் அர்ஜுன் அலுவிஹரே உள்ளிட்ட பலர் எதிர்வரும் நாட்களில் சாட்சியமளிக்கவுள்ளனர்.

இதேவேளை இம்மாதம் 17, 18ஆம் திகதிகளில் கிளிநொச்சியிலும், 19 ஆம் திகதி முல்லைத்தீவிலும், எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும் மக்களிடம் சாட்சி யங்கள் திரட்டப்படவுள்ளன. ண

# 18ஆவது அரசியல் சாசனத் திருத்தம் கண்டிக்கப்பட வேண்டியது !

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



(கொழும்பு)

18 ஆவது அரசியல் சாசனத் திருத்தம் கண்டிக்கப்பட வேண்டியதென முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்தை விரும்பும் நபர் என்ற வகையில், அரசாங்கத்தின் உத்தேச அரசியல் சாசனத் திருத்தங்களை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதென முன்னாள் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆட்சியாளர்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கக்கூடாது எனவும், அதிகாரம் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2000 ஆம்ஆண்டு தமது ஆட்சிக் காலத்தில் முன்வைக்கப்பட்ட அதிகாரப் பகிர்வுத் திட்டத்தின் மூலம் நிறைவேற்று அதிகார முறைமையை இல்லாதொழிக்க முயற்சித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கு தாம் எப்போதும் ஆதரவளிக்கவில்லை எனவும், தற்போதைய வெளிவிகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஓராண்டு காலத்திற்கு நீடிக்குமாறு கோரியதாகவும் தெரிவித்துள்ளார்.

அதிகாரப் பேராசை தமக்குக் கிடையாது எனவும், இதனால் மீண்டுமொரு முறை தேர்தலில் போட்டியிடும் உத்தேசம் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தின் 75 வீதமான பகுதியை தமது ஆட்சிக் காலத்தில் பூர்த்தி செய்ததாக அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை ஐக்கியதேசியக் கட்சியினர் நடவடிக்கைகளினால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க முடியவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# ஜனாதிபதியை உளவு பார்த்த குற்றச்சாட்டில் இருவர் கைது

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பதுளை பயணத்தின்போது அவரின் நடமாட்டங்கள் குறித்து உளவு பார்த்து தகவல் சேகரித்த குற்றச்சாட்டின் பேரில் இரு இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்விரு இளைஞர்களும் மூதூரைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்கள் பதுளையிலுள்ள பௌத்த விகாரையொன்றுக்கு அருகில் வைத்து கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விரு சந்தேக நபர்களும் விசாரணைகளுக்காக கொழும்பிலுள்ள பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# சிங்கள மக்கள் பெருந்தன்மையுடன் செயற்பட வேண்டும்

## இந்திய இராணுவத் தளபதி தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நடவடிக்கைகளின் போது சிங்கள மக்கள் பெருந்தன்மையுடன் செயற்பட வேண்டுமென இந்திய இராணுவத் தளபதி விஜய்குமார் சிங் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு சிங்கள மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென் அவர் குறிப்பிட்டுள்ளார்.


கடந்த சிவில் யுத்தத்தின்போது இனங்களுக்கு இடையில் காணப்பட்ட குரோதங்கள் மற்றும் முரண்பாடுகள் குழிதோண்டி புதைக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய இராணுவத் தளபதி விஜய்குமார் சிங் ஐந்து நாள் விஜயமொன்றை மேற்கொண்டு நேற்றைய தினம் இலங்கைக்கு வந்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதுடன், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அவர் நேரில் பார்வையிடவுள்ளார்.

தமது விஜயத்தின் மூலம் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# நல்லூரான் திருவடிக்கு இன்று சப்பைரதத் திருவிழா




படங்கள் -அரவிந்

## அருட்காட்சி தருவாய் முருகா

தொல்லை வினை தீர்க்கும் தூய தமிழ் முருகா
தோத்தரித்தோம் உனையே எமைக் காத்தருள்புரிவாய்!
இல்லை யெனாது வரமீந்தருளும் குகனே சண்முகனே
ஈசனார் திருமகனே கார்த்திகேயா கடம்பா! கந்தா!
கல்லை யொத்த மனமும் கசிந்துருகக் காட்சி தந்தே
அருளாட்சி புரிந்திடும் ஆறுமுகனே சண்முகனே
நல்லை யம்பதியுறையும் நற்றமிழ் வேலவனே நாயகனே
நமக்கருள்புரிய தினமும் அருட்காட்சி தருவாய் முருகா!

இராசையா ஸ்ரீதரன்

## சப்பைரத மேறி வருகிறான்

சப்பை ரதமேறி நல்லூரான் வருகிறான்
சங்கிலியன் ஆண்ட மண்ணில் வருகிறான்
எப்போதும் எமைக்காக்கும் நல்லூரான் வருகிறான்
எழில் மயிலில் பறந்தோடி வருகிறான்
தப்பேதும் புரிந்தாலும் தயைகாட்ட வருகிறான்
தமிழர்களின் தலைவன் தமிழ் மண்ணில் வருகிறான்
இப்போது எமக்குரிய தீர்வுகொண்டு வருகிறான்
ஈழவரின் தமிழ்க்கடவுள் நல்லையிலே வருகிறான்

மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்

## வினை தீர்க்க நல்லூரில் வரவேண்டும்

வெல்லுதமிழ் பாட்டாலுன் விரிவான புகழ்பாடி
வியந்திங்கு போற்றுகின்றோம்
விடியாத பொழுதாகி முடியாத கதையாகி
விழிசோரும் எங்கள் முன்னே!
வேலோடும் மயிலோடும் விரிசேவற் கொடியோடும்
விருப்போடு வந்தி ருந்து
விழி கொண்ட பயனாகி வழிகண்ட துணையாகி
வினைதீர்க்க நல்லூரில் வரவேண்டுமே

செ.பரமநாதன் , மண்டைதீவு

## ஓடிவந்து அருளுமையா

கூவி அழைத்தாலும் வாரா திருக்கின்றாய்
குமரா உனக்கெங்கள் குரலோ சைகேட்கலையோ
பாவி யானநாங்கள் படுந்துயர் தெரியலையோ
பாலகா ஓடிவந்து பார்த்து அருளுமையா

சிந்துபுரக் கவிராயர்

சப்பை ரதம் ஏறும் சண்முகா!
எம்மவர் வாழ்வில் ஏற்றம் தா!

சரவணா புடைவையகம்



இல. 526, பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின்வீதி)
சிவன்கோயில் அருகில் யாழ்ப்பாணம்.

# ஆரியவதிக்கு சவுதியில் சித்திரவதை இலங்கையின் அவசரகதி விசாரணைகள்

இப்போது இலங்கையின் தலைப்புச் செய்திகளில் அடிபடும் பெயர்,ஆரியவதி!

சிகிச்சையில் ஆரியவதி



49வயதான இந்த சிங்களப் பெண், தென்னிலங்கையில் மாத்தளை மாவட்டத்தில் உடதெனிய என்ற இடத்தைச் சேர்ந்தவர். கடந்த மார்ச் மாதம் 25ஆம் திகதி சவுதி அரேபியாவுக்கு வீட்டு வேலைக்காகப் போனார். இரண்டு வருடப் பணி ஒப்பந்தத்தின் ஐந்து மாதங்களே முடிய, கடந்த மாதம் 21 ஆம் திகதி அவர் கொழும்புக்கு வந்துவிட்டார், உடலில் ஏற்றப்பட்ட 23 ஆணிகளுடன்!

சவுதி அரேபியாவில் மூன்று மாடிகளைக்கொண்ட வீட்டில் வேலை பார்த்தவர் ஆரியவதி வீட்டைப் பராமரித்து, துணி துவைத்து, கழிவறையை சுத்தப்படுத்தி எஜமானர்கள் இட்ட ஏவல்களைச் செய்த அவருக்குத்தான் இந்தக் கொடுமை.

"நான் வேலைக்குச் சேர்ந்த முதல் வாரம் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஒரு நாள் கை தவறி பாத்திரத்தை உடைத்துவிட்டேன். உடனே எஜமானர் ஐந்து ஆணிகளை சூடாக்கி என் உடலில் செருகினார். வலி தாங்காமல் நான் சத்தம் போட்டுக் கத்திவிடாதபடி எஜமானி என் கழுத்தில் கத்தியை வைத்திருந்தார். இப்படி சுமார் இரண்டரை அங்குலம் உள்ள 23 ஆணிகளை சூடாக்கி என் உடலில் செருகிவிட்டார்கள்" என்று இன்னமும் விலகாத அச்சத்துடன் விவரிக்கிறார் ஆரியவதி.

கும்புறுப்பிட்டிய வைத்தியசாலையில் ஆரியவதிக்கு இரண்டரை மணி நேரம் அறுவை சிகிச்சை நடத்தப்பட்டது. தலைமை மருத்துவர் கமால் வீரதுங்க, 'ஆரியவதியின் கண் இமை, நெற்றிப்பகுதி, கால்கள், கைகள் என்று உடல் முழுவதும் உலோகங்களை

## மனித உரிமைக் காவலனான உலகுக்குக் காட்டும் வாய்ப்பு



சிகிச்சையில் எடுக்கப்பட்ட ஆணிகள்...

இனங்காட்டிய அவரது எக்ஸ்ரே ரிப்போட்டுக்கள் எங்களை அதிரவைத்தது. 18 ஆணிகளை அகற்றிவிட்டோம் என்னும் ஐந்து இருக்கின்றன. அவற்றை அகற்றினால் அவர் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்பதால் எடுக்கவில்லை!" என்றார்.

இலங்கையில் இருந்து மாதம் தோறும் சுமார் 18 ஆயிரம் பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பல்வேறு வேலைகளுக்காகச் செல்கின்றனர். இவர்களுள், தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களப் பெண்களும் அடங்குவர். சவுதி அரேபியாவில் மட்டும் சுமார் நான்கு இலட்சம் பேர் இப்படிப்பணிபுரிகிறார்கள். இப்படி பல்லாயிரக்கணக்கில் வெளிநாட்டு வேலைகளுக்காகப் போகும் பெண்களில் மாதம் 20 சடலங்களாவது இலங்கைக்கு கொண்டு வரப்படுகின்றன. இதில் விபத்துக்களும், இயற்கை மரணங்களும் அடக்கம்.

இலங்கையில் இருந்து பணிப்பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப, 'வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்' என்று அரசு நிறுவனமே நிறுவப்பட்டுள்ளது. அப்படி அந்தப் பணியகத்தில் 15 நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டு சவுதி அரேபியாவில் பணிக்கு அமர்த்தப்பட்டவர்தான் ஆரியவதி.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தலைவர் கிங்ஸ்லி ரணவக்க, "உடனடியாக ஆரியவதிக்கு நிவாரணம் அளிக்கப்படும் அவருக்கு அரசாங்கத்தின் சார்பில் வீடு கட்டித்தரப்படும்!" என உத்தரவிட்டு இருக்கிறார்.

மேலும், "இலங்கைப்பணிப் பெண்களின் நிலைமைகள் தொடர்பில் நேரடியாக ஆய்வு செய்ய, ஆரியவதியைச் சித்திரவதைப்படுத்திய வீட்டு உரிமையாளர்களை விசாரணை செய்ய வலியுறுத்தி சவுதி அரேபிய அரசு அதிகாரியுடன் பேசி இருக்கிறோம். தேவைப்பட்டால், இலங்கை அரசு செலவில் ஆரியவதியை அங்கே அழைத்துச் செல்வோம்!" என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதித் தலைவர் எல்.கே. ருகுணே தெரிவித்து இருக்கிறார்.

ஆரியவதியின் இந்த நிலைமைக்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்பதிலும்,ஆரியவதிக்கு உரிய நிவாரணம் வழங்கப்படவேண்டும் என்பதிலும் எந்த மாற்றுக்கருத்துக்கும் இடம் இல்லை.

ஆனால், "ஏன்,சிங்களப் பெண் ஆரியவதி விவகாரத்தில் இலங்கை அரசு இத்தனை தீவிர அக்கறை காட்டுகிறது? அவர் உடலுக்குள் உறுத்துகிற உலோக ஆணிகள் உள்ளதனாலா... அல்லது வேறு ஏதும். நோக்கம் உண்டா?' என்ற கேள்விக்குப்பதில் தேடினால்,

ஆரியவதிக்கு சவுதியில் நடந்த சித்திரவதைகளை கவனம் எடுத்து, உடனடியாக தனது மனித உரிமைகள் மீதான தங்களின் அக்கறையை உலகுக்குகாட்டும் வாய்ப்பாகப் பயன்படுத்தப்பார்க்கிறது ராஜபக்ஷ அரசு.ஊடகங்களின் கவனத்தை குவித்து, ஓர் அபலைப் பெண்ணுக்கு நீதி வேண்டும் என்று சாமியாடுவதன் வாயிலாக, தன்னை மனித நேயக்காவலனாக உலக அரங்கில் முன்னிறுத்த முயற்சிக்கிறது இலங்கை அரசு.

ஆரியவதியின் விவகாரத்தில் எப்போதும் இல்லாதவாறு அவசரகதியில் விசாரணைகளை மேற்கொள்கிறது இலங்கை அரசு. வெளிநாட்டு வேலைவாய்ப்புப்பணியகத்தைச் சேர்ந்த ஐந்து அதிகாரிகளை உடனடியாக சவுதி அரேபியாவுக்கு அனுப்பி பேச்சுவார்த்தை நடத்துகிறது. ஆனால்,வன்னியில் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்களை விசாரிக்க ஐ.நா. ஒரு குழுவை நியமித்ததால்,ஐ.நா.குழுவினரின் விசாவுக்கான அனுமதியை மறுத்து அவர்கள் நாட்டினுள் வரத் தடை விதிக்கிறது.


ஆரியவதியின் காயங்களை ஆற்றுவதில் காட்டுகிற வேகத்தை, வன்னிப் பெண்களின் காயங்களை ஆற்றுவதிலும், ராஜபக்ஷ அரசு காட்டுவதும் இல்லை; காட்டப்போவதும் இல்லை என்பதே யதார்த்தம்!

த. அன்பழகன்

ஜூனியர் விகடன்

# இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தைக்கு ஏற்ற நேரம் இது

## மகாத்மா காந்தியின் பேரன் கருத்து



பாகிஸ்தானில் சமீபத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளம் இந்தியா- பாகிஸ்தான் இடையே அமைதிப் பேச்சுவார்த்தை ஏற்படுவதற்கான வாய்ப்பைப் பிரகாசப்படுத்தியுள்ளது என்று மகாத்மா காந்தியின் பேரன் ராஜ் மோகன் காந்தி குறிப்பிட்டார்.

நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையில் பாகிஸ்தான் தூதுவர் அப்துல்லா ஹூசைனுடன் பேசுகையில், இருநாடுகளிடையே இப்போது ஏற்பட்டுள்ள சுமுகமான சூழலை அரசியல் ஆதாயமாக்கிக் கொள்ள வேண்டும். கடந்த கால நிகழ்வுகளை இரு தரப்பினரும் மறந்து விட்டு பேச்சுவார்த்தையைத் தொடங்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பெரு வெள்ள சேதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் நோக்கில் இந்தியா முதற்கட்டமாக 50 இலட்சம் டொலர் (ரூபா 23 கோடி) அளிப்பதாக உறுதியளித்தது. பின்னர் நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து கூடுதலாக 20 இலட்சம் டொலர் (ரூபா 92 கோடி) அளிப்பதாக இந்தியா அறிவித்தது.

இந்த உதவித் தொகைமுழுவதும் ஐக்கிய நாடுகள் சபை மூலம் பாகிஸ்தானுக்கு அளிக்கப்படுகிறது. இந்தியாவின் உதவியை பாகிஸ்தான் ஏற்றுக் கொள்ளும் என்று அந்நாட்டு பிரதமர் யூசுப் ரஸா கிலானி தெரிவித்துள்ளார்.

மனிதாபிமான அடிப்படையில் இந்தியா அளிக்க முன்வந்துள்ள உதவியை ஏற்கும் அதேநேரத்தில் பழைய விவகாரங்களை மறந்து பேச்சு நடத்த வேண்டும் என்று அவர் கூறினார். இந்தச் சந்தர்ப்பத்தை உரிய வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ராஜ்மோகன் காந்தி குறிப்பிட்டார். (ஶ்ரீ-2)

# கொத்தடிமையாக இருந்த 24 இந்தியர்கள் மீட்பு



(கோலாலம்பூர்)


மலேசிய தொழிற்சாலைகளில் கொத்தடிமைகளாக வேலை செய்து வந்த 24 இந்தியர்களை மலேசியப் புலனாய்வு துறை அதிகாரிகள் மீட்டனர்.

இதுகுறித்து பெராக் மாநில புலனாய்வுத் துறைத் தலைவர் டிசுரைதி இப்ராஹிம் கூறிய விபரம் வருமாறு,

சுங்காய் சிபுட் நகரில் இருந்து 30 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள தொழிற்சாலையில் இந்தியர்கள் சிலர் கொத்தடிமைகளாக வேலை செய்கின்றனர் என்ற தகவல் கிடைத்தது. அங்கிருந்த இந்தியர்களை இந்தியாவிற்கு அனுப்பிவிடுவோம்.

சட்டத்துக்குப் புறம்பான செயலில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். (ஶ்ரீ-2)

# கதவுகளே இல்லாத வீடுகளில் வசிக்கும் மாலிக்கிராம மக்கள்



கர்நாடக மாநிலம் கடாக்மாவட்டத்திலுள்ள டவால் மாலிக்கிராமத்தில் 60 வீடுகள் உள்ளன. பெரும்பாலும் இங்கு முஸ்லிம்கள் தான் அதிக அளவில் உள்ளனர்.

அவர்கள் டவால் மாலிக் என்பவரை குருவாக ஏற்று வழிபட்டு வருகிறார்கள். அவர் இந்தக் கிராமத்தில் கடந்த 300 ஆண்டுகளாக இருப்பதாக கிராமத்தினர் கருதுகிறார்கள்.

அவரது அருள் நிறைந்த கிராமம் என்பதால் அங்கு யாருக்கும் திருட்டு, வழிப்பறி பயம் எதுவும் இல்லை. கிராமத்தை தவால் மாலிக் காத்து வருவதாக நம்புகிறார்கள்.

இதனால் அங்குள்ள அனைத்து வீடுகளிலும் கதவு இல்லை. புதிதாக கட்டியுள்ள வீடுகளில் கூட கதவு அமைக்கவில்லை. வீட்டுக்கு வெளியில் நின்று பார்த்தால் தொலைக்காட்சி, குளிர் சாதனப்பெட்டி பீரோ போன்றவை நன்றாகத் தெரிகிறது.

கிராம மக்களும் வீட்டை திறந்து விட்ட படியே தங்கள் வேலைகளுக்குச் சென்று விடுவார்கள். காலையில் போனால் மாலையில் தான் வீடு திரும்புகிறார்கள். ஆனால், வீட்டில் வைத்த பொருள் திரும்பி வரும்போது வைத்த இடத்தில் அப்படியே இருக்கிறது. எந்தப் பொருளும் இதுவரை திருட்டு போகவில்லை. வீட்டுக்கு வெளியே உள்ள திண்ணையில் வைத்த பொருளும் திருடப்படுவதில்லை.

கடந்த 40 ஆண்டுகளாக டவால் மாலிக் கிராமத்தில் திருட்டு நடைபெறவில்லை. இதனால் நாங்கள் மிகவும் நிம்மதியாக இருக்கிறோம் என்கிறார் முல்குன்ட் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சன்ன பரப்பா பார்கி.

டவால் மாலிக் கிராமத்தைச் சேர்ந்த டவால்சாப் கூறும்போது எங்களது கிராமத்தை குருடவால் மாலிக் காத்து வருகிறார். நாங்கள் எங்களது சொத்து, பொருள் பற்றி கவலைப்படுவதில்லை. எங்கள் கிராமத்தில் யாராவது பொருளை திருடினால் அவர்களை டவால் மாலிக் ஏதாவது ஒரு வழியில் கடுமையாகத் தண்டிப்பார் என்றார். (ஶ்ரீ-2)



கேரளா மாநிலம் கோழிக்கோட்டில் நடந்துவரும் நாட்டிய விழாவில் பங்கேற்று நடனமாடும் பள்ளி மாணவியர்.

# பாரதச் செய்திகள்

## மாவோயிஸ்டுகளுடன் நேரடி பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பீகார் அரசு முடிவு

(பாட்னா)

மாவோயிஸ்டுகள் பணயக் கைதிகளாக வைத்துள்ள எஞ்சிய 3 பொலிஸாரைப் பத்திரமாகக் காப்பாற்றுவதற்கு, அவர்களுடன் நேருக்கு நேர் பேச்சு நடத்துவது என பீகார் முதல்வர் நிதிஷ்குமாரின் தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

பீகாரின் லக்கிசராய் மாவட்டத்தின் வனப் பகுதியில் கடந்த 29 ஆம் திகதி 4 பொலிஸாரை மாவோயிஸ்டுகள் கடத்திச் சென்றனர்.

அந்த நால்வரையும் விடுவிக்க வேண்டுமென்றால், பீகார் சிறையில் உள்ள தங்களது சகாக்கள் 8 கூட்டாளிகளை விடுவிக்க வேண்டும் என்று அவர்கள் நிபந்தனை விதித்தனர்.

தாங்கள் விதித்த கெடு முடிந்ததால், தாங்கள் கடத்திச் சென்ற 4பேரில் லூகாஸ் ததே என்ற உதவிப் பொலிஸ் அத்தியட்சகரை மாவோயிஸ்டுகள் கொன்றனர். அவரது உடலை நேற்று முன்தினம் படையினர் மீட்டனர்.

தங்களது நிபந்தனையை நிறைவேற்றாவிட்டால், எஞ்சிய மூவரையும் கொன்றுவிடுவோம் என மாவோயிஸ்டுகள் மிரட்டல் விடுத்தனர்.

மாவோயிஸ்டுகள் பிடியில் உள்ள எஞ்சிய மூன்று பேரை மீட்பதற்கு பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் தொடர்ந்து தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் நிலையில், ஊடகங்களை நேற்று மாவோயிஸ்டுகள் தொடர்பு கொண்டனர்.

அப்போது, தங்களால் கடத்திச் செல்லப்பட்ட 4பேரில் எங்சிய 3 பொலிஸாரும் உயிருடன் பத்திரமாக இருக்கின்றனர் என்று அவர்கள், தேடுதல் வேட்டையை உடனடியாக நிறுத்திவிட்டு பேச்சுவார்த்தையை தொடங்க வேண்டும் என்று நிபந்தனை விதித்தனர்.

இந்நிலையில் பீகார் முதல்வர் நிதிஷ்குமாரின் தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நேற்று மாலை பாட்னாவில் நிறைவடைந்தது. இதில் ராஷ்டிரீய ஜனத தளம், லோக் ஜனசக்தி, காங்கிரஸ், பிஜேபி உள்ளிட்ட பல்வேறு கட்சித் தலைவர்களும் பங்கேற்றனர்.

அதைத் தொடர்ந்து நிருபர்களிடம் பேசிய நிதிஷ்குமார், " மாவோயிஸ்டுகள் பிணைக் கைதியாக வைத்துள்ள பொலிஸாரை உடனடியாக விடுவிக்கவேண்டும். கடத்திவைக்கப்பட்டுள்ள பொலிஸாரை எந்த விதத்தில் கொடுமைப்படுத்தக்கூடாது. பொலிஸாரை மீட்பதாக மாவோயிஸ்டகளுடன் பேச்சு நடத்தத் தயார்.

அவர்களுடன் நேருக்கு நேர் பேச்சு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. மாவோயிஸ்ட்கள் தங்கள் பிரதிநிதியை அறிவிக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து பேச்சுவார்த்தை நேருக்கு நேராக நடத்தப்படும்.

மாவோயிஸ்டுகளிடம் பிணையக் கைதியாகவுள்ள பொலிஸாரைப் பத்திரமாக மீட்பதற்கு அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் எனத் தெரிவித்தார். (ஶ்ரீ-2)

# ஓரிசாவில் பிரமோஸ் ஏவுகணை பரிசோதனை

(பலாசூர்)

ஓரிசாவின் சந்திப்பூர் கடற்கரைப் பகுதியில் பிரமோஸ் ஏவுகணை நேற்று பரிசோதித்துப்பார்க்கப்பட்டது.

இது பாதுகாப்புப் படைகளால் வழக்கமாக நடத்தப்படும் சோதனைதான் என பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்தது.

நடமாடும் வாகனம் மூலம் காலை 11.35 மணிக்கு இந்த ஏவுகணை ஏவப்பட்டு பரிசோதிக்கப்பட்டது.

பிரமோஸ் -ii ஏவுகணைகள் தீவிரவாத முகாம்களைத் தாக்கி அழிப்பது உள்ளிட்ட பல்வேறு தாக்குதல் நடவடிக்கைகளுக்கு பயன்படக்கூடியவை.

290 கி.மீ.வரை இலக்கைத் துல்லியமாக தாக்கக்கூடிய பிரமோஸ் ஏவுகணையை நிலம், கடல், ஆகாயம் ஆகிய அனைத்துத் தளங்களில் இருந்தும் செலுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ

## சிறைக்கைதிகள் வாரம் பிரகடனம்

(கொழும்பு)

சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் நேற்று முதல் எதிர்வரும் 12 ஆம் திகதிகளில் சிறைக்கைதிகள் வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வாரத்தை முன்னிட்டு நாடு முழுவதிலும் உள்ள 28 சிறைச்சாலைகளில் விசேட வேலைத்திட்டங்கள் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறைக் கைதிகள் நலன்புரிச் சங்கத்தினால் இந்தச் சிறைக் கைதிகள் தினம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சிறைக் கைதிகள் நலன்புரி நடவடிக்கைகள் தொடர்பான சிறைச்சாலைகள் ஆணையாளர் என்.பி.ரத்னாயக்க குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-7)

# ஆசிரிய இடமாற்றங்களில் தலையிடுவதை அரசியல்வாதிகள் உடன் நிறுத்த வேண்டும்

## ஜனாதிபதி கடும் உத்தரவு

(கொழும்பு)

அரசியல் இலாபத்தை நோக்காகக் கொண்டு ஆசிரிய இடமாற்றங்களில் செல்வாக்குச் செலுத்தும் நடவடிக்கைகளை அரசியல்வாதிகள் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

விருப்பு வாக்குகளை அதிகரித்துக்கொள்வதற்காக அரசியல்வாதிகள் ஆசிரிய இடமாற்றங்களில் தலையிட்டு எதிர்கால சந்ததியினரின் கல்வி முன்னேற்றத்திற்குத் தடையாக செயற்படக்கூடாது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். ஊவா மாகாணத்திற்கென புதிதாக 500 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் கூறுகையில்,

ஆசிரியர்கள், மதத் தலைவர்களுக்கு அடுத்த படியாக சமூக கௌவரத்தையும் மதிப்பையும் பெற்றுக்கொள்பவர்கள். அந்த கௌரவத்தை அவர்கள் பாதுகாத்துக் கொண்டு மாணவர்களுக்கு நண்பர்களாக, சகோதரர்களாக சில வேளைகளில் பெற்றோர்களாகவும் அன்பு காட்டி வழி நடத்துவது முக்கியமாகும்.



ஒவ்வொரு ஆசிரியரும் தம்மிடம் கற்கும் மாணவர்களை சமூகத்தின் உயர் பிரஜைகளாக உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும்.

ஆசிரிய ஆசிரியைகள் பல்வேறு கட்சி கள் கருத்துக்களைக் கொண்டவர்களாக இருக்கலாம்.

எனினும் பாடசாலையில் அவர்கள் அதனைப் பாராட்டக்கூடாது. சகலரையும் சமமாக வழி நடத்துவதற்கும் சிறந்த நல்லொழுக்கமுள்ள பரம்பரையை உருவாக்குவதற்கும் அவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

அரசாங்கம் சமீபகாலமாக ஊவாவிற்கு மட்டும் 5000 இற்கு மேற்பட்ட ஆசிரியர்களை நியமித்துள்ளது. ஊவா மாகாண பாடசாலைகளைப் பொறுத்தவரையில் 15 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற ரீதியில் கல்வி நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. எனினும் கொழும்பில் 21 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியரே கற்பித்தலில் ஈடுபடுகின்றனர்.

இந்த வகையில் இங்கு ஆசிரியர்களுக்கான குறைபாடு இருக்க முடியாது. உள்ள ஆசிரியர்களை முறையாகப் பகிர்ந்து கொண்டால் இன்றுள்ள பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டும் என்பது எனது நம்பிக்கை.

அரசாங்கம் நாடளாவிய ரீதியில் 45 ஆயிரம் ஆசிரியர்களை புதிதாக நியமித் துள்ளது.

எனினும் நியமனங்கள் கிடைத்து சில மாதங்களிலேயே ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்று வேறு அரச அலுவலகங்களுக்குச் சென்று விடுகின்றனர். அவர்களுக்கு ஆசிரிய தொழிலின் பெறுமதி தெரியவில்லை என்றே கருத முடிகிறது.

இந்த விடயத்தில் அரசியல்வாதிகள் கவனமெடுக்க வேண்டும். தமது விருப்பு வாக்குகளை இலக்காகக் கொண்டு ஆசிரியர்களுக்கு மாற்றம் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கையை நிறுத்த வேண்டும். மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு அவர் கள் செயற்பட வேண்டியது அவசியம்.

ஆசிரியர்களுக்கான ஓய்வூதியம் தாமதமாவது தொடர்பில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். கல்வித்துறையை மேம்படுத்தும் பல்வேறு செயற்றிட்டங்கள் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாம் பதவியேற்ற காலத்தில் நாட்டில் 05 வீதமானோரே கணனி அறிவைக் கொண்டிருந்தனர். தற்போது அந்த எண்ணிக்கை 45 வீதமாக அதிகரித்துள்ளது என்றார். (ஸ்ரீ)

## உள்ளூராட்சி மன்றங்களுக்கு தலா 200 மில். ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நான்கு வருட உள்ளூராட்சி முன்னேற்றத்திட்டம் ஒன்றிணை அமுல்படுத்தவுள்ளது.

உலக வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளும் இத்திட்டத்தின் முதல் வருட அபிவிருத்தி நடவடிக்கைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மாவட்ட செயலகங்களுக்கு வழங்கியுள்ள அறிவுறுத்தல் சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஒருஉள்ளூராட்சி மன்றத்திற்கு ஒரு வருட நிதியாக 200 மில்லியன் ரூபா வீதம் வடக்கு-கிழக்கிலுள்ள 77 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

இந் நிதியினைக்கொண்டு பொது மக்களின் பங்களிப்புடன் உள்ளூராட்சி மன்ற எல்லைக்குடப்பட்ட பகுதி களில் வீதி அபிவிருத்தி வடிகால்கள் அமைப்பு ,மைதான புனரமைப்பு மற்றும் நூலக அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியன முன்னெடுக்கப்படவுள்ளன. (ஸ்ரீ)

## உல்லாசப் பயணத்துறை வருமானங்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

போர் நிறைவடைந்துள்ளதாகவும் அமைதி தோன்றியுள்ளதாகவும் அரசு மேற் கொண்டு வரும் மிதமான பிரசாரங்களால் உல்லாசப் பயணத்துறை வருமானங்கள் பெருமளவு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இலங்கையில் உல்லாசப்பயணத்துறை கடந்த வருடம் 326.3 மில்லியன் டொலர்களாக இருந்த போதும் இந்த வருடம் அதன் வருமானம் 700 மில்லியன் டொலர்களை விட அதிகமாகலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

பொருளாதார நெருக்கடிகளை சந்தித்துள்ள வேளையில் வரவு-செலவுத்திட்டத்தினை நிரப்புவதற்கு உல்லாசப் பயணத்துறையே பெரும் உதவிகளை ஆற்றிவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வருடத்தின் முதல் ஏழு மாதங்களில் இலங்கைக்கு வருகைதந்த உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை 48.7. விகித அதிகரிப்பை கண்டுள்ளது.

இந்த காலப்பகுதியில் 3 இலட்சத்து 41ஆயிரத்து 991 பேர் இங்கு வருகை தந்துள்ளனர். கடந்த வருடத்தின் இதே காலப் பகுதியில் 2 இலட்சத்து 29 ஆயிரத்து 952 பேர் வருகைதந்திருந்தனர்.

இந்தியா, தென்ஆசியா, கிழக்கு ஆசியா, மேற்கு ஐரோப்பா, வட அமெரிக்கா, கிழக்கு ஐரோப்பா ஆகிய நாடுகளில் இருந்தே அதிகளவான பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக உல்லாசப் பயணத்துறை வட்டரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை புலம் பெயர் தமிழ் மக்கள் அதிகளவில் இலங்கை வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

## ஜே.வி.பி.யினரின் எதிர்ப்புகளுக்கு அஞ்சி அரசியலமைப்பு திருத்தங்கள் கைவிடப்படாது

### அரசு அறிவிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பியின் எதிர்ப்புக்கு அஞ்சி அரசியலமைப்பு திருத்தங்கள் கைவிடப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரசியலமைப்பத் திருத்தங்கள் மிகவும் எளிமையானது எனவும் இதில் எவ்வித ஆபத்துக்களும் கிடையாது எனவும் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன ஆறில் ஐந்து பெரும்பான்மை பலத்துடன் மேற்கொண்ட திருத்தங்களை விடவும் இது மிகவும் ஜனநாயகமானதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்பு திருத்தங்களினால் மக்களின் அபிலாஷைகள் எந்த வகையிலும் பாதிக்கப்படமாட்டாது என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் அபிவிருத்தி முயற்சிகளுக்கு இடையூறு ஏற்படும் சட்டங்களை களைவதே அரசியலமைப்புத் திருத்தங்களின் பிரதான நோக்கம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## சூடான் அகதிகள் முகாமில் கலவரம்; 43 பேர் பலி

ஆபிரிக்க நாடான சூடானில் தாப்பர் பகுதியில் கடந்த 2003ஆம் ஆண்டு கடந்த இரு பிரிவினருக்கிடையே கலவரம் மூண்டது. இது தொடர்ந்து நடைபெற்றதில் 3 இலட்சம் பேர் கொல்லப்பட்டனர்.

27 இலட்சம் பேர் தங்கள் வீடுகளை இழந்து அகதிகளாகினர்.

வீடு இழந்து தவிக்கும் அவர்களுக்கு சூடானின் மேற்கு பகுதிகளில் பல அகதிகள் முகாம் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு இலட்சக் கணக்கானவர்கள் தங்கி உள்ளனர். இங்குள்ளவர்கள் அடிக்கடி ஆயுதங்களால் தாக்கி கொண்டுள்ளனர்.

இதனால் அங்கு கலவரம் ஏற்பட்டு வருகிறது. இந்த நிலையில் மேற்கு தார்பரில் உள்ள ஹமிதியா முகாமில் கலவரம் மூண்டது. இரு பிரிவினரும் ஒருவரை ஒருவர் தாக்கி கொண்டனர். நள்ளிரவில் தொடங்கிய மோதல் விடிய விடிய நடந்தது.

இந்த கலவரத்தில் 43 பேர் உயிரிழந்தனர். 100க் கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். (ஸ்ரீ)

## சிறையில் இருந்து தப்பி வந்த கைதி பொலிஸாரிடம் சிக்கினார்

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வீரவில சிறைச்சாலையில் கடூழிய சிறைத் தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்த வேளை தப்பியோடி வந்திருந்த கைதி ஒருவரை மட்டக்களப்பு பொலிஸ் நிலையப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பு அரசடி பஸ் தரிப்பிடத்தில் நின்றபோது இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு வேலூர் கொலனியைச் சேர்ந்த பரமானந்தம் யோகேஸ்வரன் (வயது 32) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர் ஆவார்.

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் குற்றவியல் வழக்கு ஒன்றில் இவருக்கு 48 மாத கால கடூழிய சிறைத்தண்டனை வழங்கி 2009.06.08 ஆம் திகதி தீர்ப்பளித்தது. வீரவில சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர் கடந்த 20 ஆம் திகதி அங்கிருந்து தப்பி வந்துவிட்டார்.

இவருடன் மட்டக்களப்பு நாவற்குடாவைச் சேர்ந்த கோகுலராஜ், மன்னாரைச் சேர்ந்த பழனி சந்திரகுமார் ஆகியோரும் தப்பியுள்ளனர் என அரச தகவல் திணைக்களத்தின் மட்டக்களப்பு பிரிவு தகவல் வெளியிட்டிருந்தது.

இவர் மீண்டும் வீரவெல சிறைச் சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ)

நான் அடிமையாக இருக்க மாட்டேன். ஆகவே, நான் எஜமானாகவும் இருக்க மாட்டேன். இதுதான் ஜனநாயகக் கோட்பாட்டின் அடிப்படைத் தத்துவம். –ஆபிரகாம் லிங்கன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பசப்பு வார்த்தையாகிவிட்ட மீள்குடியேற்ற நடவடிக்கை

யுத்தத்திற்குப் பின்பான மீள்குடியேற்றம் என்பது இன்னமும் முழுமை பெறாத விடயமாக இருப்பதைப் பார்க்கும்போது இலங்கை அரசு தமிழர்கள் மீது எத்துணை அக்கறை கொண்டுள்ளதென்பதை உணரமுடியும்.

வன்னிப் பெரும் போர் நடைபெற்று முடிவுற்ற வேளை சுமார் 3 இலட்சம் தமிழ் மக்கள் முட்கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்களை விடுவிப்பதில் அரசு காட்டிய அசமந்தம் மறப்பதற்குரியதல்ல.

உலக நாடுகள், ஐக்கிய நாடுகள் சபை எனப் பலரும் கோரிக்கை விட்டும் அரசு அசைந்த பாடில்லை. மாறாக ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு விடப்பட்டதன் காரணமாக முகாம்களில் அடைக்கப்பட்ட மக்களை விடுவிப்பதற்கு அரசு இணங்கிக் கொண்டது.

தேர்தலில் வெற்றி பெறும் நோக்கை மட்டும் மையமாகக் கொண்டு முகாம்களில் அடைக்கப்பட்ட தமிழ் மக்கள் விடுவிக்கப்பட்டனரேயன்றி அவர்களின் நலன் கருதியோ ,அன்றி அவர்களின் சுதந்திர உரிமை கருதியோ அவர்கள் விடுவிக்கப்படவில்லை என்ற உண்மை உணர்தற்குரியது.

இதுதான் நிலைமை. இப்போதுகூட வவுனியாவில் உள்ள முகாம்களிலும் வன்னியில் இடைத்தங்கல் முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் அவலத்தை சிந்திப்பதற்கு யார் உள்?

மழைகாலம் ஆரம்பிக்க இருக்கின்ற நிலையிலும் அந்த மக்களை உரிய இடங்களில் குடியமர்த்துவதற்கு அரச மட்டத்தில் எடுக்கப்படும் முயற்சிகள் அசமந்தம் நிறைந்ததாகவும்,கரிசனையற்றதாகவும் இருப்பதனை காணமுடிகின்றது.

போரினால் அனைத்தையும் இழந்து முகாம்களிலும் இடைத்தங்கல் முகாம்களிலும் தமிழ் மக்கள் துன்பப்படும்போது,

இராணுவத்தினரைக் குடியேற்றுவதிலும் வன்னிப் பெரு நிலப்பரப்பின் பெரும் பகுதியை அரச காணியாக்குவதிலும் ,அரசியலமைப்பு சீர்திருத்தத்திலும் அரசு தீவிரம் காட்டி நிற்பதை அவதானிக்க முடிகின்றது.

ஆக,இலங்கை அரசின் நிறுத்திட்டமான முடிவு, இன்னுமொரு விடுதலைப் போராட்டத்தை தமிழ் மக்கள் நினைத்தும் பார்க்கக் கூடாது. அதற்கேற்றவாறு தமிழர் தாயகம் என்பதை உடைத்து அங்கு சிங்கள மக்களைக் குடியேற்றி,தமிழர்களின் வாக்குப் பலத்தைக் குறைப்பது.

அதேநேரம் இராணுவக் குடியிருப்புக்களை அமைப்பதன் ஊடாக ஒவ்வொரு தமிழ்க் குடிமகனும் அவதானிக்கப்பட்டு அவனின் சுதந்திர சிந்தனை மேலெழாமல் பார்த்துக் கொள்வது.

இத்திட்டத்தை முன்னெடுத்து அதனை முழுமைப்படுத்தும் வரை மீள்குடியேற்றம் என்பது வெறும் பசப்பு வார்த்தையாக மட்டுமே இருக்கும். முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள மக்கள் அனுபவிக்கின்ற அவலங்கள்,துன்பங்கள் பற்றி சிந்திப்பதற்கு இந்த நாட்டில் யாருமே இல்லை.

தற்போதைய அரசு தனது இருப்பை நிலை நிறுத்தும் முயற்சியில் மிகக் கடுமையாக ஈடுபட்டுள்ளது. அதற்காக அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் என்ற பெயரில் மாற்றங்கள் நடக்கின்றன.

இலங்கை சிங்கள மக்களின் பூமியாக இருக்க வேண்டுமாயின் இந்த அரசு இன்னும் பல ஆண்டுகளுக்கு நீடிக்கவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள பெரும்பான்மை இன மக்கள் தயாராகவே இருக்கின்றனர். இதுவே யதார்த்தம்.

# ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு இருள்சூழ்ந்த எதிர்காலம் வரப்போகிறது

## புதிய ஜனநாயக மாக்சிக லெனினிஸக் கட்சி வலியுறுத்தல்

இலங்கையின் அனைத்து உழைக்கும் மக்களுக்கும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கும் இன்றிருப்பதை விட மோசமான இருள்சூழ்ந்த எதிர்காலமாகவே அமையப் போகின்றது. அதற்கான முன் அறிவிப்பாகவே நிறைவேற்றப்படவிருக்கும் அரசியலமைப்பிற்கான பதினெட்டாவது திருத்தம் காணப்படுகின்றது.

இத் திருத்தத்தில் காணப்படும் ஒவ்வொரு அம்சமும் இது வரை மக்கள் அனுபவித்து வந்த அற்ப சொற்ப சுதந்திரங்களையும் ஜனநாயக உரிமைகளையும் குழிதோண்டிப் புதைப்பதாகவே அமைந்துள்ளது என புதிய ஜனநாயக மாக்சிக லெனினிஸக் கட்சி தெரிவித்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இன்றிருப்பதைவிட அப்பட்டமான பாசிஸ சர்வாதிகாரத்தை செயற்படுத்துவதற்கு இத்திருத்தம் வழிவகுக்கிறது. இதன் உள்ளடக்க அபாயத்தை உணராது மக்கள் ஏனோதானோ என்று இருப்பதானது அதற்கான பாரிய விலைகளைச் செலுத்த வேண்டிய அபாயத்தையே உருவாக்கும்.

இத்தகைய தனிநபர் சர்வாதிகாரத்தை வலுப்படுத்த முன்நிற்போரும் துணைபோவோரும் நாட்டிற்கும் உழைக்கும் மக்களுக்கும் தேசிய இனங்களுக்கும் மனமறிந்து துரோகம் செய்பவர்களாகவே இருப்பர். ஆதலால் அவசர அவசரமாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ள அரசியலமைப்புக்கான பதினெட்டாவது திருத்தத்தின் உள்நோக்கங்களைப் புரிந்து கொண்டு மக்கள் அதனை எதிர்த்து நிராகரிக்க வேண்டும் என்பதையே எமது புதிய ஜனநாயக மாக்சிக லெனினிஸக் கட்சி வலியுறுத்தி நிற்கிறது.

காலனித்துவ காலத்திலும் அதன் பின்னான காலத்திலும் கொண்டு வரப்பட்ட அனைத்து அரசியலமைபுக்களும் முழு நாட்டின் உழைக்கும் மக்களினதும் தேசிய இனங்களினதும் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பவைகளாக அமைந்திருந்ததில்லை. அவை நாட்டின் சொத்து.சுகம் படைத்தோரினதும், சுரண்டும் வர்க்கத்தினதும்,அவர்கள் பக் கத்தில் இருந்துவந்த ஏகாதிபத்திய சக்திகளினதும் நலன்களையும் தேவைகளையும் நிறைவேற்றும் அடிப்படைகளையே கொண்டிருந்தன.

அந்த வகையிலேயே தற்போது நடைமுறையில் இருக்கும் அரசியலமைப்பு மறைந்த முன்னாள் ஜனாதிபதியான ஜே.ஆரினால் தனிக்கட்சி,தனிநபர் சர்வாதிகார நடைமுறைகளைக் கொண்டதாக கொண்டு வரப்பட்டது. கடந்த முப்பத்திரண்டு வருடங்களாக அதன்கீழ் இந்த நாடும் அனைத்து மக்களும் அனுபவித்த கொடுமைகள் தொடரானவைகளாகும்.

அத்தகைய அரசியலமைப்பை முற்றாகவே மாற்றியமைக்க வேண்டும் என்ற மக்களின் கோரிக்கையை புறந்தள்ளிவிட்டு மேலும் தனிக்கட்சி,தனிநபர் சர்வாதிகாரத்தை வலுப்படுத்தி கொள்ளும் வகையில் மட்டுமன்றி குடும்ப ஆட்சியை நீடித்துச் செல்லும் உள்நோக்கத்துடனேயே இப்பதினெட்டாவது திருத்தம் கொண்டு வரப்படுகிறது.

எனவே இந்நாட்டின் உழைக்கும் மக்கள் மீதும் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் மீதும் அக்கறை உள்ள ஒவ்வொருவரும் இத்திருத்தத்தை எதிர்த்து நிற்கவேண்டும். இன்றைய அரசியலமைப்பை முற்றாக மாற்றி அமைக்கும் பாதையில் ஜனநாயகத்தையும் மக்கள் நலன்களையும் வென்றெடுத்து பாதுகாக்கும் வகையில் நேர்மையான இடதுசாரி,ஜனநாயக முற்போக்கு சக்திகள் ஒன்றிணைந்து செயல்பட முன்வரல்வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச–5)

# 20 வருடங்களுக்கு முன்னர் காணாமல்போன 158 தமிழ் இளைஞர்களுக்காக பிரார்த்தனை

மட்டக்களப்பு வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக் கழகத்திலிருந்து 158 தமிழ் இளைஞர்களை விசாரணைக்கென அழைத்துச் சென்று காணாமல்போய் 20 வருடங்கள் நிறைவினையொட்டி விசேட பூசைகளும்,பிரார்த்தனைகளும் நேற்று ஆலயங்களில் நடைபெற்றன.

1990ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 05–ம் திகதி காலை பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முகாமிற்குள் நுழைந்த இராணுவத்தினரும்,தமிழ் ஆயுதக் குழுக்களின் உறுப்பினர்களும் அங்கு தஞ்சமடைந்திருந்த இளைஞர்களை பலவந்தமாகப் பிடித்து 3 பஸ்களில் ஏற்றிச் சென்றனர்.

இவர்கள் காணாமல்போய் நேற்றுடன் 20 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் உயிருடன் உள்ளார்களா? இறந்துவிட்டார்களா?என்ற கேள்விக்கு இதுவரை பதில் கிடைக்காமல் இவர்களது பெற்றோரும் உறவினர்களும் மன்றாடிக் கொண்டிருக்கின்றனர்.

காணாமல்போன தமது பிள்ளைகள் உயிருடன் உள்ளார்கள் எனச் சிலர் இன்னமும் நம்பிக்கொண்டிருக்கும் அதே நேரம் 20 வருடங்களாக வராத்வர்கள் இனிமேலும் வருவார்களா என சிலர் தெரிவிக்கின்றனர்.

நேற்று நடைபெற்ற விசேட பிரார்த்தனையில் மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் காணாமல் போனவர்களின் குடும்ப உறவினர்கள் கலந்துகொண்டனர். (ச–5)

# தறப்பாள்கள் கிழிந்த நிலையில் கொட்டில்! மாரியை எதிர்கொள்ள தயாராகும் மக்கள்

## இரத்தினபுரம் மக்கள் திண்டாட்டம்

தறப்பாள்கள் கிழிந்த நிலையில் உள்ளன. வரப்போகும் மாரியை எப்படி எதிர்கொள்வது? என கிளிநொச்சி இரத்தினபுரம் தாழ் நிலத்தைச் சேர்ந்த மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். சுற்றிச்சுற்றி வாய்க்கால்களும், பள்ளங்களும் நிறைந்த அந்தப் பகுதியில் மாரி மழை நாட்களில் கடுமையான வெள்ளம் ஏற்படும். இரணைமடு மற்றும் கனகாம்பிகைக் குளத்தை சேர்ந்த நீர் அந்தப் பகுதிகளில் பெருக்கெடுத்துப் பாயும்.

இந்த வெள்ளத்தை தாங்கும் சக்தி குடியிருப்புக்களுக்கும் தறப்பாள்களுக்கும் இல்லை என்று குறிப்பிடும் அந்தப் பகுதி மக்கள், கடந்த 5 மாதங்களுக்கு முன்னர் தாங்கள் மீள்குடியேற்றப்பட்டதாக தெரிவித்தார்கள். இதுவரையில் எமக்கான தகரங்களைத் தரவில்லை இன்று தருகிறோம் நாளை தருகிறோம் என்று காலம் கழிந்து போயுள்ள நிலையில் மாரி மழையை குறித்து பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது. தங்களுக்கான அரை நிரந்தர வீடுகள் கட்டித் தருவது குறித்தும் எந்த சமிக்ஞையும் தெரியவில்லை.

இப்பொழுது கட்டியிருக்கும் தறப்பாள்கள் கிழிந்துள்ளன. அவை அண்மைய நாட்களில் பெய்த மழைக்கே ஒழுகியது. குழந்தை, குட்டிகளுடன் இருக்கும் நாம் மாரிகாலத்தை எப்படி எதிர்கொள்ளப்போகிறோம்? வாய்க்கால்கள் பெருக்கெடுத்தால் அதன் பின்னர் பல மாதங்கள் ஈரம்காயாத சகதி நிலமாகவே இந்தப் பகுதி இருக்கும். கடந்த காலங்களில் கட்டப்பட்ட எங்கள் வீடுகள் தரைமட்டமாக அழிந்துவிட்டன. இந்நிலையில் பாதுகாப்பான வீடுகளைக் கட்டித்தர சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இரத்தினபுரம் மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை இரணைமடுக்குளத்திற்கு கீழாகவுள்ள திருவையாறு, கனகாம்பிகைக்குளம், வட்டக்கச்சி, கிளிநொச்சி உட்பட பல கிராமங்களும் இந்த அபாயத்தை எதிர்கொள்கின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் மீள்குடியேறிய 30க்கு மேற்பட்ட கிராமங்களில் உள்ள மக்களுக்கு தகரங்கள் வழங்கப்படவில்லை. வன்னியைப் பொறுத்தவரையில் பல கிராமங்கள் இந்த நிலையில் உள்ளன. இவர்கள் அனைவருக்கும் எதிர் வரும் பெரு மழைக்கிடையில் பாதுகாப்பான இருப்பிடங்களை அமைத்துக்கொடுக்க வேண்டியுள்ளது. (ச–5)

## சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கு



தூய்மையிலிருந்தும் மௌனத்திலிருந்துமே ஆற்றல் மிக்க சொற்கள் பிறக்கின்றன. புண்ணியச் செயல்கள் அனைத்தும் வீடு பேற்றுக்குக் கருவியாக இருப்பதால் பயன் உள்ளவை. புண்ணியச் செயல்கள் செய்பவனுக்கே நன்மை செய்கின்றன. பிறருக்கு அதனால் ஒரு போதும் நன்மை இல்லை.

அன்பு, அறம், புனிதம் இவை நம்மிடம் வளரும் தோறும் புறத்தேயும் அவற்றை மிகுதியாகக் காண்போம்.

நாம் எண்ணும் எண்ணம் ஒவ்வொன்றும் நமது உடல் என்னும் துண்டின் மீது சம்மட்டியைப் போன்று தாக்கி நாம் விரும்பும் வண்ணம் அதை உருவாக்குகிறது.

## தலைமன்னார், இராமேஸ்வரம் இடையிலான கடற்போக்குவரத்தை ஆரம்பிக்க கோரிக்கை

தமிழர் தாயகத்தில் ஆயுதப் போர் முடிவடைந்த நிலையில் தென்னிலங்கை மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் வடகிழக்கை பார்க்க ஆர்வம் காட்டி வருகின்றார்கள். எனவே அவர்கள் கிழக்குப்பகுதிக்கு வரக் கூடியவாறு தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்குமிடையிலான கடல் வழி போக்குவரத்தினை தொடங்க வேண்டுமென கிழக்கு மாகாணசபை அமைச்சரவை தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றியுள்ளார்கள்.

தீர்மானத்தினை நிறைவேற்றி அரசுக்கு அமைச்சரவை அனுப்பியுள்ளது. அதில் உடனடியாக கடல் வழி போக்குவரத்தினை ஆரம்பிப்பதற்கு தேவையான ஒழுங்குகளை செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

## சட்டவிரோத கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

(திருநெல்வேலி)

வடமராட்சி துன்னாலைப் பகுதி மற்றும் மணற்காடு விளாங்காட்டுப் பகுதிகளில் சட்டவிரோதமான கசிப்பு உற்பத்தி பெருமளவு அதிகரித்து வருகின்றது.

மேலும் மேற்படி இவ் நடவடிக்கையால் மதுபோதையில் பலரும் பல்வேறு சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே இப்பகுதியில் இடம்பெற்று வரும் கசிப்பு உற்பத்தியைத் தடுக்க சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப் பிரதேசவாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-7-43)

## சிலி நாட்டின் சுரங்கத்தில் சிக்கியுள்ள தொழிலாளர்களை மீட்க பகீரதப் பிரயத்தனம்

சிலி நாட்டில் உள்ள சான்கோசே சுரங்கத்திற்கு அருகே நாசா அமைப்பைச் சேர்ந்த குழுவொன்று அங்கு நிலத்திற்கு அடியில் சிக்கிக் கொண்டுள்ள சுரங்கத் தொழிலாளிகளுக்கு உதவும் பொருட்டு பெரும் பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபட்டிருக்கும் மருத்துவர்கள் ,உளவியல் மற்றும் சத்துணவு நிபுணர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றனர்.

இன்னும் 3 மாத காலத்திற்குள் சுரங்கத் தொழிலாளிகளை சென்றடைய முடியாதிருக்கும் என மீட்புப்பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் காலப்பகுதியில் சுரங்கத் தொழிலாளர்கள் நிலத்திற்கடியில் சுமார் 700 மீற்றர்களுக்கும் அதிக ஆழத்தில் மிக வெப்பமும் புழுக்கமும் மிக்க இடம் ஒன்றிலேயே நாட்களை கடத்த வேண்டியிருக்கும் எனவும் சுரங்கத்தொழிலாளர்கள் தமது வேளாவேளை கடன்களை நிறைவேற்றுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் நாசா குழுவின் தலைவர் மைக்கல் டன்கன் தெரிவித்துள்ளார்.

மருத்துவப் பணியாளர்கள் சுரங்கத் தொழிலாளர்களின் சுகாதாரத்தை கண்காணித்துக் கொண்டிருக்கும் அதேவேளை பொறியியலாளர்கள் அவர்களை சென்றடைய முயற்சித்து வருகின்றார்கள். கடந்த நான்கு நாட்களாக ஏற்கனவே சுமார் 40 மீற்றர் ஆழத்துக்கு பாறைகளைக் குடைந்துள்ள பொறியியலாளர்களுக்கு பாறைகளைக் குடையும் இன்னொரு இயந்திரமும் தற்போது அனுப்பப்பட்டுள்ளது.

மலையின் வேறொரு இடத்தில் இயந்திரத்தைப் பொருத்தவுள்ள பொறியியலாளர்கள் இன்று அதனைப் பயன்படுத்த ஆரம்பிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ)

## இராமாவில், மணற்காடு இடைத்தங்கல்முகாம் மக்கள் சொந்த இடத்தில் மீள் குடியேற்றப்படவுள்ளனர்

(பொற்பதி)

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இராமாவில் நலன்புரி நிலையம் மற்றும் மணற்காடு இடைத்தங்கல் முகாம் ஆகியவற்றில் தங்கியிருக்கும் வடமராட்சி கிழக்கு , மாமுனை, செம்பியன் பற்று வடக்கு ,தெற்கு ,தாளையடி , மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை மற்றும் ஆழியவளை ஆகிய கிராமங்களை சேர்ந்த மக்களும் உறவிணைப்பு மூலம் உறவினர் வீடுகளில் தங்கியிருக்கும் மக்களும் மீள் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது ,

இரண்டாம் கட்டமாக கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையத்தில் உள்ள மக்களில் 356 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் எதிர்வரும் 9 ,10 ஆம் திகதிகளில் அவர்களின் சொந்த இடத்திற்குக் கொண்டு செல்லப்படவுள்ளனர். இங்கு கொண்டு செல்லப்படும் மக்கள் அங்குள்ள பொது மண்டபம் ,பாடசாலை மற்றும் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டு 3 நாள் சமைத்த உணவு வழங்கப்பட்டு பின்னர் அவர்களது சொந்தக்காணிகளில் கொட்டகைகள் அமைப்பதற்கு கூரை விரிப்பு ,தடிகள் மற்றும் ஏனைய பொருட்கள் வழங்கப்பட்டு சொந்தக் காணிகளுக்கு செல்ல அனுமதிக்கப்போவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற வடமராட்சி கிழக்கு மக்களை மீள் குடியேற்றம் செய்வதற்கான மீள் குடியமர்வின் ஏற்பாட்டுக் குழு கூட்டத்திலேயே இந்த முடிபு எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இம் மக்களின் மீள் குடியமர்வின் பின்னர் இந்த மக்களுக்கு சேவை செய்யும் அரசாங்கத்தின் திணைக்களங்களும் மற்றும் பொது நிறுவனங்களும் அங்கு செயற்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இம் மக்களின் முழுமையான மீள் குடியமர்வின் பின்னர் கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையம் மூடப்படவுள்ளதாகவும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-7-64)

## பூநகரி பிரதம தபால் நிலையம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது

(பூநகரி)

பூநகரி பிரதம தபால் நிலையம் மீண்டும் பூநகரி நகர்ப்புறமான வாடியடி நாகதேவன் துறை வீதியிலுள்ள தனியார் கட்டடத்தில் கடந்த புதன்கிழமை தொடக்கம் இயங்க ஆரம்பித்துள்ளது.

போர் நடவடிக்கை காரணமாக பல இடங்களுக்கும் குடிபெயர்ந்த தபால் நிலையம் மன்னார் வீதியில் 4 ஆம் கட்டைப் பகுதியில் சிறுகுடிசை ஒன்றில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

பூநகரியில் நிரந்தரமான தபாற்கட்டடம் ஒன்று அமைப்பதற்கான காணி வாடியடியில் ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டடம் கட்டுவதற்கான நிதியும் அரசினால் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்படும் என பூநகரி தபாலதிபர் எம்.இராசேந்திரா தெரிவித்தார்.

பூநகரி இடம்பெயர்வுக்குப் பின்பு தபாலகம் முன்பு செயற்பட்டஆஸ்பத்திரி பகுதியை இராணுவத்தினர் முகாம் மாற்றியுள்ளமையால் தபாலகம் முழுமையாக செயற்பட முடியாதிருந்தது.

இடப்பெயர்வின் பின்பு பூநகரியில் அமையப் போகும் முதலாவது கட்டடம் இதுவாகும். (ஸ்ரீ)

## மதுப்பிரியர்கள் அட்டகாசம்

(குருநகர்)

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட குருநகர் சந்தையின் வெளிப்புறப் பகுதியில் மதுப்பிரியர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இவர்களின் செயற்பாடானது பாங்சால் வீதியிலேயே நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தால் அப்பகுதியிலுள்ள மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். (ஸ்ரீ)

## முதலாம், இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தினால் புதிய மற்றும் பழைய பாடத்திட்டத்திற்கமைவாக முதலாம், இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ளன.

இதில் முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப்பரீட்சை எதிர்வரும் 15ஆம் திகதியும் இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுப்பரீட்சை எதிர்வரும் 9ஆம்திகதியும் மூன்றாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை எதிர்வரும் 17ஆம்திகதியும் நான்காம் வருட முதலாம் அரையாண்டு பரீட்சை எதிர்வரும் 27 ஆம் திகதியும் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

## தி.மு.க. பாராளுமன்றக் குழுத்தலைவரை சாடுகிறார் கவிஞர் தாமரை

தி.மு.க. பாராளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு தமிழரா, இந்தியரா என்ற குழப்பம் அவருக்கே இருப்பதாகவும், இதில் எந்தக் குழப்பமும் தேவையில்லை எனவும் ,அவர் தமிழரோ ,இந்தியரோ அல்லர் அசல் சிங்களவர் எனவும் கவிஞர் தாமரை தெரிவித்துள்ளார்.

இதனையே அவருடைய பேட்டி புலப்படுத்தி நிற்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு இந்தியா வழங்கும் உதவிகள் பாதிக்கப்பட்ட தமிழர்களை சென்றடைகின்றனவா என்பதைக் கண்காணிக்கும் பொலிஸ்காரனாக இந்தியா செயற்பட முடியாது என்றும் ,வடக்கு -கிழக்கு மாகாணங்களில் சிங்கள இராணுவ குடியிருப்புகள் அமைப்பது தொடர்பாக ஆதாரம் இல்லாமல் குறை சொல்ல முடியாது என்றும் தி.மு.க. பாராளுமன்றக் குழுத்தலைவர் டி.ஆர்.பாலு தெரிவித்திருக்கிறார்.

அதற்கு பதிலளித்துள்ள கவிஞர் தாமரை அவரது இந்தப் போட்டி நமக்கு மட்டுமல்ல ,அவர் சார்ந்திருக்கும் தி.மு.க. தலைமைக்கே வியப்பை அளித்திருக்கும் என்றும் அப்படி இல்லை என்றால் எல்லோரும் சேர்ந்து நாடகமாடுகிறார்கள் என்ற முடிபுக்குத்தான் வர வேண்டும் எனக் கூறியுள்ளார்.

இப்போதும் கூட சுயேட்சையான ஒரு ஊடகவியலாளர் குழுவை எவ்வித தடையும் தணிக்கையும் இன்றி தமிழர் பகுதிகளை சுற்றிப் பார்க்க அனுமதி வழங்கி தரட்டுமே. அப்படி அனுமதி வாங்கித்தந்தால் நானே நேரில் சென்று உண்மைகளை கண்டறிந்து மக்களுக்குச் சொல்லத் தயாராக இருக்கிறேன் எனவும் கவிஞர் தாமரை குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## குடிநீரின்றி தவிக்கும் மக்கள்

(கொழும்பு)

இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டு தென்னிலங்கையில் இருந்து வந்த காலம் தொடக்கம் இன்று வரையான 40 ஆண்டு காலப்பகுதியில் குடிநீருக்குப் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றோம் என்று தருமபுரம் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

1958ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்டு தென்னிலங்கையில் இருந்து வந்து தருமபுரத்தில் குடியேறிய போதும் இதுவரையில் ,ஒழுங்கான நீர் விநியோகம் தமக்குக் கிடைக்கவில்லை என்று இவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

அத்துடன் மழைக்காலங்களில் வெள்ளத்தினால் வரும் பாதிப்புகளை ஆண்டு தோறும் சந்திக்கிறோம். கோடை காலங்களில் நீர் இல்லாமல் அவதிப்படுகிறோம்.

ஆனால் 1968ஆம் ஆண்டில் கட்டப்பட்ட கல்மடுக்குளத்தின் நீர் தருமபுரம் பிரதேசத்தால் வேறு இடங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறது. இவ்வாறு செல்லும் நீரின் ஒரு பகுதியை தருமபுரம் பிரதேச மக்களுக்கு கிடைக்கக்கூடியதாக வழங்கினால் அவர்களுடைய குடிநீர் பிரச்சினை தீருவதுடன் அவர்களுடைய பயிர்ச்செய்கையும் வளரும் எனவும் கூறுகின்றார்.

விடுதலைப்புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் நடந்த போரின் போது 2008ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளால் கல்மடுக்குளம் உடைக்கப்பட்டதையடுத்து இந்த குடிநீர்ப்பிரச்சினை மேலும் அதிகமாகியுள்ளது.

இதேவேளை இந்தக்குளத்தை அடுத்து வரும் மழை காலத்திற்குள் முன்னர் மீளக் கட்டி முடிக்கும் பணிகள் இரவு பகலாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் ஒருவர் தெரிவித் துள்ளார்.

இந்தக்குளத்தின் அணைக்கட்டு முன்னர் இருந்ததைவிடவும் மேலும் 3 அடிகள் உயர்த் தப்படுவதால் மேலதிகமாக நீரை வழங்கக் கூடியதாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)













சக்தி எப்.எம்.,சக்தி ரிவியின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற இசை நிகழ்ச்சியின் ஆரம்ப நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் தவரட்ணம், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட தென்னிந்தியப் பாடகி நித்தியசிறிக்கு எம்.பி.சி.வலையமைப்பின் சிரேஷ்ட பணிப்பாளர் திருமதி சாந்தி பகீரதன் மாலை அணிவிப்பதையும் நித்தியசிறியின் பாடல் இடம் பெறுவதையும் படங்களில் காணலாம்.

## எல்லாப் போட்டிகளிலும் சூதாட்டம்

# பாகிஸ்தான் அணியின் வண்டவாளத்தை தண்டவாளத்தில் ஏற்றினார் யசீர் ஹமீட்



(லண்டன்)

இதுவரை நடந்த எல்லாப் போட்டிகளிலும் போட்டிச் சூதாட்டம் (பிக்சிங்)அடிப்படையில் தான் நடந்துள்ளது என பாகிஸ்தான் கிரிக்கெட் அணி வீரர் யாசீர் ஹமீட் தனது பேட்டியில் சக வீரர்கள் வண்டவாளத்தை தண்டவாளத்தில் ஏற்றி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

இவரது ஆதாரப்பூர்வமான வீடியோப் பேட்டி பாகிஸ்தான் வீரர்கள் சூதாட்டம் நடத்தியது உண்மைதான் என்பது புலனாகிறது.

லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் இங்கிலாந்துடன் நடந்த டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் வீரர்கள் இன்னிங்ஸ் தோல்வி அடைந்தனர். இந்தப்போட்டி நடந்துகொண்டிருக்கும் போது லண்டனிலிருந்து வெளியாகும் நியூஸ் ஒப் வேர்ல்ட் என்ற நாளிதழ் தனது சிறப்புப் பக்ககத்தில் பாகிஸ்தான் வீரர்களின் சூதாட்டம் குறித்து முதன்முதலாக வெளியிட்டது. இச் சூதாட்டத்தில் ஒன்றரைக் கோடி வரை பேரம் பேசப்பட்டது.

நோபால் வீசி தங்களின் தோல்வியை எவ்வாறு நிர்ணயிப்பது என வாங்கும் காசுக்கு நன்றியோடு (நாட்டுத் துரோகம்) செயல்பட்டனர். பாகிஸ்தான் அணித்தலைவர் சல்மான் பட் பணம் வாங்கும்போது அந்தக்காட்சி வீடியோவில் பதிவு செய்யப்பட்டது. இதனை அடுத்து ஸ்கொட்லாந்து யார்ட் பொலிஸார் அணித்தலைவர் சல்மான் பட், வேகப்பந்துவீச்சாளர் முகமெட் ஆசிப், முகமொட் அமீர், விக்கெட் காப்பாளர் கம்ரான் அக்மல் ஆகியோரிடம் விசாரணை நடத்தினர். தரகர் ஒருவரும் கைது செய்யப்பட்டார். இந்தச்சூதாட்டம் கிரிக்கெட் உலகில்பெரும் தலைகுனிவை ஏற்படுத்தியது. அணித்தலைவர் சல்மான் பட், ஆசீப், ஹமீட் ஆகிய 3 பேரும் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

### பணம் சம்பாதித்து என்ன பயன்?

இந்நிலையில் நியூஸ் ஒப் வேர்ல்ட் நேற்று அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் யாசீர் ஹமீட் அளித்த பேட்டியை வெளியிட்டுள்ளது. இந்தப் பேட்டியில் அவர் கூறியிருப்பதாவது,

நான் அணியின் வெற்றிக்காக போராடி விளையாடினேன் ஆனால் சில வீரர்கள் போட்டி பிக்சிங் செய்து தோல்விக்காக விளையாடினர். எனக்கு மிகுந்த வேதனையாக இருக்கின்றது. நோபோல் வீச 24 ஆயிரம் வரை பெற்றனர். சூதாட்டம் தில்லுமுல்லு காரணமாக இப்படி பணம் சம்பாதித்து என்ன பயன்? இவர்கள் எப்படியும் சிக்குவார்கள் என எனக்குத் தெரியும்.

இங்கிலாந்துப் போட்டியில் ஒரு மில்லியன் பவுண்ட் வரை பேரம் பேசப்பட்டது. அனைத்துப்போட்டியிலும் சூதாட்டம் நடக்கும் ஒவ்வொரு போட்டி பிக்சிங் அடிப்படையில் விளையாடி தோல்வியைச் சந்திப்பர். அவர்கள் ஏன் அப்படிச் செய்கின்றார்கள் என்பது கடவுளுக்குத்தான் தெரியும். இவ்வாறு யசீர் கூறியுள்ளார்.

### பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அவசரமாகக் கூடுகிறது.

இவரது 'பேட்டி மூலம் பாகிஸ்தான் வீரர்கள் சூதாட்டம் உறுதியாகியுள்ளது இதன் அடிப்படையில் சர்வதேச கிரிக்கெட் சபையும் பாகிஸ்தான் அரசும் என்ன நடவடிக்கை எடுக்கும் என்பது தற்போதைய கேள்வி யசீர் போட்டிக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அவசரமாகக் கூடியிருக்கிறது.

# இலங்கை அணி வீரர் சூதாட்டத்துடன் தொடர்பு

## ஐ.சி.சி.குற்றச்சாட்டு

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஊழல் எதிர்ப்பு பிரிவு ,கடந்த வருடம் இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கிண்ண இருபது-20 கிரிக்கெட் தொடரில் இருந்து இலங்கை அணி வீரர் ஒருவரின் நடவடிக்கை தொடர்பில் கூர்ந்து அவதானித்து வருகிறது.

சட்டவிரோத சூதாட்ட முகவர் ஒருவர் என சந்தேகிக்கப்படும் ஒருவருடன் இரவு நேரத்தில் அதிகம் பழகிவந்ததையிட்டு ஏற்பட்ட சந்தேகத்தின் பேரிலேயே குறித்த வீரர் கண்காணிக்கப்படுவதாக தி கார்டியன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் சர்வதேச கிரிக்கெட் சபையின் ஊழலுக்கெதிரான பிரிவினால் இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் குமார் சங்கக்காரவிடம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி வீரர் குறித்து இலங்கை பொலிஸார் விசாரணை நடத்தினர்.குறித்த வீரர் மீது குற்றம் சுமத்தப்படவில்லை.எனினும் இவ்விசாரணையின் முன்னேற்றமின்மை குறித்து ஊழலுக்கெதிரான பிரிவு அதிருப்தி வெளியிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை ஐ.சி.சியின் பிரதம நிறைவேற்றதிகாரி ஹாருன் லோகார்ட் இவ்விடயத்தில் தனது பொதுவான ஏமாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

ஊழல் எதிர்ப்புப் பிரிவின் செயற்பாடு பொலிஸைப் போன்றது அல்ல. முற்றுகைகளையோ கைதுகளையோ மேற்கொள்வதற்கு எமக்கு அதிகாரம் எதுவுமில்லை என அவர் கூறியுள்ளார்.

# சூதாட்ட முகவரிடம் பணம் பெற்றதை பாகிஸ்தான் வீரர்கள் ஒப்புக்கொண்டனர்

ஆட்ட நிர்ணய சதியில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணித்தலைவர் சல்மான் பட், வேகப்பந்து வீச்சாளர்களான மொஹமட், ஆசிப் ஆகியோர் மஸார் மஜீத் என்பவரிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டதை ஸ்கொட்லண்ட் யார்ட் அதிகாரிகளிடம் ஒப்புக்கொண்டுள்ளனர்.

ஆனால் அவர்கள் முறைக்கேட்டில் ஈடுபடவில்லை எனவும் பல்வேறு வணிக நிறுவனங்களுடனான விளம்பர ஒப்பந்தத்திற்காகவே இப்பணத்தை பெற்றதாகவும் அவ்வீரர்கள் தெரிவித்ததாக அவர்களின் சட்ட ஆலோசகர் டபாஸில் ரிஸ்வி பாகிஸ்தான் தொலைக்காட்சி யொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

மஸார் மஜித் சூதாட்ட முகவர் என்பதை தான் அறிவிக்கவில்லை எனவும் மேற்படி வீரர்கள் கூறியுள்ளதாகவும் குறித்த விளம்பர ஒப்பந்த ஆவணங்களையும் அதிகாரிகளிடம் காண்பித்ததாகவும் சட்டத்தரணி ரிஸ்வி தெரிவித்துள்ளார்.



அமெரிக்காவின் நியூயார்க்கில் யு.எஸ். ஓபன் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் மூன்றாவது சுற்றுப் போட்டியில், பிரான்சின் ரஜானோவை வீழ்த்திய உற்சாகத்தில் செர்பியாவின் இவானோவிச்.

## றோட்டரிக் கழகத்தின் வலைபந்தாட்டத்தில் பல்கலை அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகர மைய றோட்டரிக் கழகம் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கங்களுக்கிடையே நடத்திய வலைப் பந்தாட்ட இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக அணி வெற்றிபெற்றது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அணியும் சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக்கழக அணியும் மோதிக்கொண்டன. இதில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி 28இற்கு 12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ச-5)

## வெள்ளையனை நோக்கிப் பூலித்தேவன் பாய இராணுவம் நோக்கிப் பிரபா பாய்ந்தார்

### காசி ஆனந்தன் உரை

(சென்னை)

நெல்லை மாவட்டம் நெற்கட்டும் சேவல் கிராமத்தில் விடுதலைப் போராட்ட வீரர் பூலித் தேவனின் 295-வது பிறந்த நாள் விழா நேற்றுக் கொண்டாடப்பட்டது.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன், ஈழத்துக் கவிஞர் காசி ஆனந்தன், நடிகர் கருணாஸ், சசிகலாவின் கணவர் எம். நடராஜன் ஆகியோர் இவ் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இவ் விழாவில் பேசிய கவிஞர் காசி ஆனந்தன்,

இரண்டு இலட்சம் தமிழர்களையும் 40 ஆயிரம் விடுதலைப்புலிகளையும் ஈவு இரக்கமற்றுக் கொன்று குவித்தது இலங்கை இராணுவம்.

ஈழத்தில் நாங்கள் போராடவில்லை. போராட்டம் எங்களுக்குத் திணிக்கப்பட்டது. அதனால் தான் நாங்கள் போராடுகின்றோம்.

வெள்ளைக்காரனை எதிர்த்து பூலித் தேவன் பாய்ந்தார். அதேபோல் தம்பி பிரபாகரன் சிங்களவனை எதிர்த்துப் பாய்ந்தார்.

சிங்களவரினின் கொடுமை எத்தனை? எத்தனை? (ச-5)

## மற்றொரு மேர்வின் சில்வா

முன்னாள் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவின் பாணியில் பெண் ஒருவரை மரத்தில் கட்டி வைத்த சிவில் பாதுகாப்புப் படை ஊழியர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காலி மாவட்டத்தின் வெலிபன்னப் பிரதேசத்தில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இளைஞர் ஒருவர் குறித்து புகார் இடுவதற்காக மேற்படி சிவில் பாதுகாப்புப் படை ஊழியரிடம் அப் பெண் அணுகிய போது மரத்தில் கட்டி வைத்தார் என்று கைதை மேற்கொண்டவர்களான பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-5)

### 18 ஆவது...

மச் சந்திரன் தெரிவித்துள்ளார்.

கட்சியின் உறுப்பினர்கள் கூடி அரசியல் சாசனத் திருத்தங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உத்தேச 18-வது திருத்தச் சட்ட மூலம் 13-வது திருத்தச் சட்ட மூலத்தில் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வின்மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கட்சி அண்மையில் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அரசியல் சாசனத் திருத்தங்களின் அடிப்படையில் காவல்துறை ஆணைக்குழுவின் அதிகாரங்கள் இரத்துச் செய்யப்படவுள்ளதாகவும் இரு மாகாண காவல்துறை ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகளையும் பாதிக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

### அரசியல் சாசனத் திருத்தச் சட்டம் மூலம்...

மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

கொண்டு வரப்படவுள்ள அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் சிறுபான்மை மக்களின் மனக் குறைகளையும் அரசியல் அபிலாஷைகளையும் முற்றாக நிராகரிக்கின்றது.

அதனை ஐக்கிய தேசியக் கட்சியும் முஸ்லிம் காங்கிரஸும் ஆதரிக்கும் நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடுநிலைத் தன்மையினைப் பின்பற்றும் என நம்புகின்றேன்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினைக் கொண்டு வந்தபோது அபிவிருத்தி என்றும் சிறுபான்மையினரின் நலன்கள் என்றும் பேசப்பட்டன.

ஆனால் அவை தேர்தல் காலத்தில் மட்டும் தான் பேசப்பட்டன. பின்னர் அவை எதுவுமே நடைபெறவில்லை.

அதைப் போல கடந்த தேர்தல் காலத்தில் பேசப்பட்ட பல விடயங்கள் இன்றுவரை நடைமுறைக்கு வரவில்லை. இதனைக் கூட்டமைப்பு நன்றாக உணர்ந்திருக்கின்றது.

ஜனாதிபதி முறைமைக்கு மாற்றாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் என்ற ஒன்றை ரணில் முன்வைத்துள்ளார். இது நகைப்புக்குரிய ஒன்றாகும்.

மேலும் 18-வது திருத்தத்தின் மூலம் பொலிஸ், உச்ச நீதிமன்றம், தேர்தல்கள் திணைக்களம் என்பன அரசிடம் போய்ச் சேரும்.

இதனால் அவை அரசின் கைப் பொம்மைகளாக மட்டுமே இருக்கப் போகின்றன. மேலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அதிகாரப் பரவலாக்கத்துக்கும் இது முரணான ஒன்றாக அமையும்.

மேலும் தமிழர்களுடைய பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் 2 ஆம் சபை ஒன்று அமைக்கப்படும். அதில் ஆளுநர்களும் அரசு சார்ந்த சில புத்திஜீவிகளும் மட்டுமே அங்கம் வகிப்பர்.

இதனால் தமிழர் உட்பட சிறுபான்மையினருக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை என்றார். (ச-5)

### தொண்டு...

நாட்டு தன்னார்வத் தொண்டர்கள் இலங்கையில் பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவர் என தேசியப் பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

புலனாய்வுப்பிரிவினர் அனுமதி அளிக்காத பட்சத்தில் குறித்த பணியாளர்களின் விசா ரத்துச் செய்யப்படும் அல்லது விசா நீடிக்கப்படாது என அறிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் எந்தவொரு தன்னார்வ தொண்டு நிறுவனமும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நேரடித் தொடர்புகளைப் பேணியமைக்கான சாட்சியங்கள் கிடைக்கப்பெறவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

### அரசின்...

மாகவே அவர் மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கு ஆதரவை வெளியிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த வழக்கு இந்த மாதம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த வழக்கின் தீர்பின் அடிப்படையில் தமக்கு சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டுவிடும் என்ற நிலையில் ஐக்கியதேசியக்கட்சியின் பலவீனத்தினால் தம்மைக் காப்பாற்ற முடியாது எனக் கருதியே அவர் அரசாங்கத்துடன் இணைந்துகொண்டுள்ளதாக கூறப்படுகிறது. (ச-5)

### அரசியல் சாசனத் திருத்தப்...

அரசியல் சாசனத் திருத்தம் தொடர்பான பிரேரணை எதிர்வரும் 8 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது. எதிர்க்கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் பாரிய எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளன.

இந்தப் போராட்டத்தினால் வன்முறைகள் ஏற்படக் கூடும் எனவும் இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் காவல்துறையினர் அறிவித்துள்ளனர்.

விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் காவல்துறை மா அதிபர் மகிந்த பாலசூரிய தலைமையில் நேற்றைய விசேட கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

குறிப்பாக நாடாளுமன்றத்திற்குச் செல்லும் பாதைகளுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

*ஆதரவு கட்சிக்கு பணம் அன்பளிப்பு*

இதேவேளை அரசியல் அமைப்புத் திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களிக்கும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு 500 முதல் ஆயிரம் கோடி ரூபாய் வரையில் பணம் வழங்கப்படவுள்ளதாக பிரபல சிங்கள இணையம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரின் தகுதி, திறமை மற்றும் கட்சியில் காணப்படும் செல்வாக்கு ஆகியவற்றின் அடிப்படையில் தொகை உயர்த்தப்படும் என அந்த இணையம் சுட்டிக்காட்டியுள்ளது.

எதிர்க்கட்சி உறுப்பினர்களுடனான பேரம் பேசும் நடவடிக்கைகளை சில சிரேஷ்ட உறுப்பினர்கள் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசியல் அமைப்புத் திருத்தங்களுக்கு ஆளும் கட்சியில் சிலர் எதிர்ப்புத் தெரிவித்த போதிலும் அதனைப் பகிரங்கமாக வெளிப்படுத்த முடியாத நிலைமையில் அவர்கள் காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். இந்த அரசியல் அமைப்புத் திருத் தங்கள் ஜனாதிபதியின் தனிப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அமுல்படுத்தப்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். (ச-5)

### ஒழுக்...

கட்சியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க கடந்த வாரம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

### பஸ்ஸின்...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சடலம் தற்போது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. பஸ்ஸின் சாரதி பொலிஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (ச-5)


கலைமகள் அழகு நிலா



பயிற்சி நிலையம்

ஏழு நாட்கள் பயிற்சிகள் இடம்பெற்று பயிற்சியின் நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும். இப் பயிற்சியின் மூலம் ஒரு அழகு நிலையம் நடாத்தும் திறமையைப் பெற்றுக் கொள்ளலாம். இப் பயிற்சி கற்றுக் கொள்வது இலகுவானதும் அதிக வருமானம் தரக் கூடிய தொழிலாகும். பெண்களுக்கு மிக அவசியமானது. வயதெல்லை கிடையாது. கீழ் வரும் பயிற்சிகள் அனைத்தும் செயன்முறையாகும்.

பயிற்சிகள்

- ★ Facial (ஏழு வகை)
- ★ Threading
- ★ Pimple Treatment
- ★ Waxing
- ★ Hair Stratening (2 வகை)
- ★ Hair Perming (2 வகை)
- ★ Hot oil Massage
- ★ Hair Cutting
- ★ Hair dye
- ★ Hair Colouring
- ★ Pedeicure Manicure
- ★ கறுப்புக் காய்கள் இயந்திரம் மூலம் அகற்றப்படும்
- ★ Bleaching
- ★ Bridal make up (6 வகை)

தொடர்புகள்: 077 3719071 021 4908151

பயிற்சிக் கட்டணம்:- 4000/=
பயிற்சி ஆரம்பம் :- 10/09/2010
பயிற்சி நேரம் :- 9 மணி - பி.ப.4 மணி வரை

கலைமகள் அழகுநிலா
390, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

(c-1014)



திருமண வாழ்த்துக்கள்



மங்கலகரமான இன்றைய நாளில்
இல்லறம் எனும் நல்லறம்தனில் இணையும்
ஜெயபாலசிங்கம் மைதிலி
தம்பதிகள் எல்லா வளமும் பெற்றுப் பல்லாண்டு
வாழ இறையாசி வேண்டி மங்கலகரமான
வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றோம்.

06.09.2010 வலம்புரிக் குடும்பம்



DHL WORLDWIDE EXPRESS

உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்

குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம் ஏஜ்

உலக நாடுகளுக்கு ஆகாய கடல் வழி மார்க்க பொதிகள் சேவை

DHL விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை DHL

தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிற்கான தபால்கள் பொதிகள் சேவை (சனி ஞாயிறு தினங்கள் தவிர்ந்த)

நாட வேண்டிய முகவரி
259 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்

லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா வீதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை

TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06

46. ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
பிரதான வீதி, நெல்லியடி
5. திருநகர் வீதி, கிளிநொச்சி
44. மில் றோட், வவுனியா

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம் பெறும் (c-1013)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல:3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.